வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.05.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 161 | பக்கங்கள் : 16










# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

முள்ளிவாய்க்கால், மே 18

தமிழின அழிப்பு நாளாக தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

14ஆவது ஆண்டாக முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரதான நிகழ்வு நேற்று முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு முற்பகல் 10.30 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு ஆரம்பமானது. 15



## கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுப்பு!

### சிங்கள ராவய தடுத்ததால் குழப்பம்

கொழும்பு, மே 19

கொழும்பு - பொரளை கனத்தை மயான சந்தியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வை சிங்கள ராவய அமைபபு தடுத்து நிறுத்த முயன்றது. இதையடுத்து, அப்பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, சிங்கள ராவய அமைப்பை சேர்ந்த சிலர் அங்கு வந்து நினைவேந் தலை நிறுத்துமாறு ஏற் பாட்டாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

'புலிகளுக்கான நினைவேந்தல் 15

## சிறீதரன் எம்.பியும் நானும் சேர்ந்தே செயல்படுவோம்

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

முள்ளிவாய்க்கால், மே 19

"இலங்கை தமிழரசு கட்சிக்கு யார் தலைமை ஏற்றாலும், நானும் சிறிதரனும் ஒன்றாகவே செயல்படுவோம். எம்மை யாராலும் பிரிக்க முடியாது", என்று தெரிவித்துள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன்.

நேற்றைய தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்ற பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நினைவஞ்சலி நிறைவடைந்ததும் சி. சிறிதரன், எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் ஒன்றாக பேசியபடி வந்தனர். அங்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் வி.மணி வண்ணன் தரப்பினர் நின்றனர். சுமந்திரனும், சிறிதரனும் பேசிக் கொண்டு வந்த 15

## 'தேசிய போர் வீரர்' தினத்தை இன்று நினைவேந்துகிறது அரசு

கொழும்பு, மே 19

ஈழப் போரின்போது கொல்லப்பட்ட படையினரை நினைவுகூரும் விதமாக 'தேசிய போர் வீரர்' நினைவேந்தல் தினத்தை இன்றைய தினம் அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

இந்த நினைவேந்தல் தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு - பத்திரமுல்லையில் இராணுவத்தினருக்கான நினைவுத் தூபியில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், அமைச்சர்கள், இராஜாங்க அமைச் சர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், முப்படை தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் பங்குபற்றவுள்ளனர். போரில் உயிரிழந்த இராணுவத்தினரும் இந்த நிகழ்வில் பங்கேற் 15

## தமிழரசு கட்சியில் சேரமாட்டேன் விரும்பினால் என்னுடன் சேரலாம்!

### சுமந்திரன், சிறீதரனுக்கு விக்னேஸ்வரன் பதில்!

யாழ்ப்பாணம், மே 19

இலங்கை தமிழரசு கட்சியுடன் நான் இணைந்து செயல்பட போவதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறீதரன், எம். ஏ. சுமந்திரன் கூறியவை தவறு. விரும்பினால் அவர்கள் எமது கட்சியுடன் இணைந்து செயல்படலாம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று முள்ளிவாய்க்கால் அஞ்சலி யின் பின்னர் சிறீதரன், சுமந்திரன், மணிவண்ணன் ஆகியோர் பேசியபோது "ஐயாவும் (க. வி. விக்னேஸ்வரன்) இனி எங்களுடன் தான் வரப்போகிறார்", என்று சிறீதரன் எம். பி. கூறி 15

## கப்பல் விவகாரம்: தவறான மன்றில் வழக்கு தாக்கல்!

கொழும்பு, மே 19

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூலம் இழப்பீட்டை பெற தவறான நீதிமன்றத்திலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தெரிவித்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் பிரதி வாதிகள் 6 பேருக்கு எதிராக, 15

## தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக கிளிநொச்சி சிவன் ஆலயத்தின் முன்றலில் நேற்று கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான நேற்றைய தினம் கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் (சிவன்) ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடைபெற்றது.

அந்த ஆலய வளாகத்தில் தொல்பொருள் உள்ளதாகவும் அந்த நிலப்பரப்பை எல்லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாகவும் நேற்றைய திகதி குறிப்பிடப்பட்டு பிரதேச செயலகம் ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் ஆலய முன்றலில் ஒன்று கூடியிருந்தனர்.

எனினும், 15

## கிளிநொச்சி...

நேற்றைய தினம் எல்லையிடும் பணிகளுக்காக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் எவரும் அப்பகுதிக்கு வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

போரில் கொல்லப்பட்ட உறவுகளுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொதுச் சுடரை இறுதிப் போர் களத்தில் 13 குடும்ப உறுப்பினர்களை இழந்த மன்னாரை சேர்ந்த தாயார் ஒருவர் ஏற்றிவைத்தார். சமநேரத்தில், முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தமது உறவுகளுக்காக சுடர்களை ஏற்றினர்.

இதையடுத்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. திருகோணமலை தென்கயிலை ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளார் அதனை வாசித்தார்.

நினைவேந்தலில்பங்கேற்ற உறவுகள் கொல்லப்பட்ட தமது உறவுகளின் படங்களை ஏந்தியவாறும், தமது உறவுகளுக்கு பிடித்த உணவுகளை படையல் இட்டும் கதறி அழுது, கண்ணீர் சொரிந்தும் உணர்வெழுச்சியுடன் தமது உறவுகளை நினைவேந்தினர்.

அத்துடன், அந்தப் பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், அன்னதானம் என்பவற்றையும் மேற்கொண்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பாடசாலைகள், அரசியல் கட்சிகளின் பணிமனைகள், பொது நிறுவனங்கள், சமூக நிறுவனங்களில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டோருக்காக அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. இதேநேரத்தில், போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினை வேந்தி ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபட்டனர். பல இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

**மட்டக்களப்பு**

கல்லடி கடற்கரை, சின்வெம்பு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. இதே நேரம், பாடசாலைகள், பொது நிறுவனங்களிலும் போரில் கொல்லப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன், மாவட்டத்தின் பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதேவேளை, திருகோணமலை நகரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பொது இடங்களில் நடத்த நீதிமன்றம் தடை விதித்தது. எனினும், மக்கள் தமது உறவுகளுக்காக வீடுகளில் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

பொதுவாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், அன்னதானம், ஆத்ம சாந்தி பூசைகள் இடம்பெற்றன. இதேபோன்று, பாடசாலைகளிலும் அதிகளவான பாடசாலைகளில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், காலை பிரார்த்தனைகளை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இதேநேரம், புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் கனடா போன்ற நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெற்றது. இதன் போது, கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## தமிழரசு...

யிருந்தார்.

இது தொடர்பில் க. வி. விக்னேஸ்வரனிடம் கேட்டபோது, "அப்படி அவர்களுடன் இணைந்து செயல்படும் எந்த யோசனையும் இல்லை. கடந்த வாரம் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதும், சுமந்திரன் எனக்கு பக்கத்தில் தான் உட்கார்ந்திருந்தார். நான் சொன்ன விடயங்களை ஆமோதித்து தலையசைத்தபடி, சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். நாம் செய்யும் சில நல்ல, முக்கிய விடயங்களின் பெயரை, தாம் எடுப்பதற்காக இப்பொழுது அப்படி சொல்கிறார்களோ தெரியவில்லை. அவர்களின் கட்சியில் (தமிழரசு) இணைய வேண்டிய எந்த தேவையும் எனக்கில்லை. என்னுடன் இணைந்து செயல்படுவது பெருமையெனில் அவர்கள் வந்து இணைந்து கொள்ளலாம்", என்றார். (ஐ)

## தேசிய...

கவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று 2009 மே 18ஆம் நாள் அரசாங்கம் அறிவித்தது. இதையடுத்து, மே 19ஆம் நாளை இராணுவம் போர் வெற்றி விழாவாகக் கொண்டாடி வருகின்றது.

1981 முதல் நான்கு கட்டங்களாக நடந்த ஈழப் போரில் இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த 28, 702 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயினர் என்றும் கூறப்படுகின்றது. எனினும், அரசாங்கம் உறுதிப்படுத்தப்பட்ட தகவலை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தவறான...

சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் 25 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக ஜனாதிபதி ஊடக பிரிவு நேற்று முன்தினம் அறிக்கை மூலம் தெரிவித்தது.

இந்த வழக்கு மே 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், மீண்டும் அது தொடர்பிலான விசாரணை ஜூன் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

எனினும், இந்த வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்துக்கு மாற்றுவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பெருந்தொகை பணத்தை செலவு செய்து சிங்கப்பூரில் தவறான நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக சுற்றுச்சூழல் நீதிக்கான மையத்தின் தலைவர் கலாநிதி ரவீந்திநாத் தாபரே நேற்று சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூரில் தவறான நீதிமன்றம் ஒன்றிலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுவது தொடர்பில் ஆராயப்படுவதாகவும் கலாநிதி ரவீந்திநாத் தாபரே குறிப்பிட்டார்.

பெரும் சிரமத்துக்கு மத்தியில் 45 இலட்சம் டொலரை செலவு செய்து, வெளிநாட்டு சட்ட வல்லுநர்களைத் தேடி, வெளிநாட்டு சட்ட நிறுவனங்களுக்கு பெருந்தொகை பணத்தை செலவு செய்து, ஆகக்குறைந்தது எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது என்பது கூட தெரியாமல் அரசாங்கம் செயல்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சில அமைப்புகள் ஒன்றிணைந்து எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணை நேற்று நடைபெற்றது.

கப்பல் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சமத்துவ கட்சி பணிமனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!



கிளிநொச்சி, மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 2023 நிகழ்வுகள் கிளிநொச்சி சமத்துவ கட்சியின் மாவட்ட பணிமனையில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

சமத்துவ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வேங்கை தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுச் சுடரை கிளிநொச்சி வரத்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் இராமன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைவருக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டன. இதனை தொடர்ந்து மலர் அஞ்சலியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமா ஆரம்பித்து வைக்க ஏனையவர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதனை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு போர்வையில் மக்களை அரசு ஏமாற்றுகின்றது!

### எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, மே 19

தற்போதைய அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு போர்வையில் அது குறித்து மும்முரமாக பேசி, இந்நாட்டு மக்களை மீண்டும் முட்டாளாக்கி, ஏமாற்றி வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை வங்கி பிரதிநிதிகள் குழுவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்திற்கும் நாட்டுக்கும் சமர்ப்பிக்குமாறு நான் உட்பட கோரினோம். அவ்வாறான உடன்படிக்கைக்கு வருவதற்கு முன்னர் அனைத்து அரசியல் தரப்புகளுடனும் கலந்துரையாடி நிலைபேறான நிரந்தர தீர்வை எட்டுவது அவசியமாகும். ஆனால், நமது நாட்டின் ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு தாமதமாகச் சென்று மிகவும் தோல்வியுற்ற பேச்சி லும் ஒப்பந்தத்திலும் ஈடுபட்டுள்ளனர். இதன் பெறுபேறுகளை மக்கள் தற் போது அனுபவித்து வருகின்றனர் என் றும் அவர் கூறினார்.

ஸ்மார்ட் கலந்துரையாடல் மற்றும் சிறந்த உடன்பாட்டை எட்டுமாறு பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தாலும், தற்போதைய அரசாங்கம் அது எதனையும் கருத்தில் கொள்ளவில்லை. தாம் நன்றாகச் செய்வதாக கூறி தம்பட்டமடித்துச் செயல்பட்டது. இதன் பாதகமான விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

உள்ளக கடன் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால், பொருளாதாரம், வங்கிக் கட்டமைப்பு மற்றும் 220 இலட்சம் பேரும் நிர்க்கதியாகி நாடு அழிந்துவிடும். இது அரசாங்கத்தின் கொள்கையாக அமையக்கூடாது. இவ்வாறு பல்வேறு விடயங்களை மக்களுக்கு முன்வைத்து அரசாங்கம் செயல்பட்டால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் மக்கள் சக்தியின் கீழ் எழுவோம் - என்றார். (ஐ)

## கொழும்பில்...

எமக்கு வேண்டாம்' என்ற வசனம் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அங்கு சென்ற சிங்கள ராவய அமைப்பினர் ஏற்பாடுகளை குழப்புவதற்கும் முயற்சித்தனர்.

இதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது. நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்க முன்னரே அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில்,அங்கு நின்ற பொலிஸார் மற்றும் படையினர் நினைவேந்தலை நிறுத்துமாறு கூறினர்.

குழப்பத்தை ஏற்படுத்த இந்த நிகழ்வை செய்யவில்லை. எனவே, நினைவேந்தலை நிறுத்த முடியாது என்று படைத்தரப்பினரிடம் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

இதையடுத்து, அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனினும், குழப்பத்துக்குள் மத்தியில் தீபம் ஏற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டியதாக எதிர்வரும் திங்கட்கிழமை நீர்கொழும்பு - பால்தி சந்தியில் நினைவேந்தல் ஒன்று நடைபெறும் என்றும் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார். (ஐ)

## சிறீதரன்...

போது, மணி வண்ணன் அவர்களிடம்-

"நீங்கள் இருவரும் தலைமைப் பதவிக்கு பிரச்னைப்பட்டு சண்டை பிடிப்பதாக சொல்கிறார்கள். நீங்கள் இருவரும் சிரித்துக் கதைத்துக் கொண்டு வருகிறீர்களே", என்று கேட்டார்.

உடனே எம். ஏ.சுமந்திரன், "யார் தலைவரானாலும் நாங்கள் ஒற்றுமையாகவே செயல்படுவோம். எங்களை யாரும் பிரிக்க முடியாது. நாம் ஒன்றாகத் தான் செயல்படுவோம்.

அதுதானே, உங்களிடம் தலைமையை தந்துவிட்டு ஒதுங்கலாம் என பார்த்தால், நீங்கள் ஐயாவுடன் (க. வி. விக்னேஸ்வரன்) போய் நிற்கிறீர்கள்." என்றார்.

அப்பொழுது மணிவண்ணன், தமது கட்சியின் பிரமுகர் பேராசிரியர் சிவநாதனை சுட்டிக்காட்டி, "இங்கே சிவநாதன் சேரும் நிற்கிறார்" என்றார்.

உடனே சிறீதரன், "எல்லோரும் ஒன்றுதான். ஐயாவும் இனி எங்களுடன் தான் வரப்போகிறார்" என்றார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது…!

ஆளும்வர்க்கம் எப்போதும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள கைக்கொள்கின்ற முதல் முயற்சி எதிர்தரப்பை பிரித்து வைத்திருக்க முயல்வது தான்.

இந்தப் பிரித்தாளும் தந்திரத்தை சிங்கள ஆளும் வர்க்கமும் மிகக் கச்சிதமாக ஆண்டாண்டு காலமாக கைக்கொண்டு வருகின்றது.

செல்வநாயகம் சமஷ்டி கேட்க, ஜி. ஜி. ஐம்பதுக்கு ஐம்பது என்று அடம்பிடித்ததும் அதிகம் ஏன் தமிழரசு தமிழ் பல்கலைக்கழகம் கேட்க, ஜி. ஜி. இந்து பல்கலைக்கழகம் கேட்டதும் அந்தப் பின்னணியில்தான்.

தமிழர் பிரச்னைக்கு தீர்வாக இந்தியா இலங்கையை வற்புறுத்தி பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றிய போது, அதனை தமிழர் தரப்பில் ஒருபகுதியினர் நிராகரிக்க, அதனையே காரணம்காட்டி அதன் அமுலாக்கத்தை இன்று வரை தெற்கு நிராகரித்து வருவதும் அந்த வகையறாவிலேயே வருகின்றது.

இன்று வடக்கு - கிழக்கில் நடக்கும் காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்குதல், தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைத்தல் என்று நடக்கின்ற அனைத்து விடயங்களையும் மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி செய்யப்படுமானால் ஓரளவுக்கேனும் தடுத்து நிறுத்தலாம்.

நிறுத்த முடியாமல் போனால்கூட அதற்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படும் மாகாண சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தால் அது வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகக்குறைந்தது, இதனைக்கூட மாகாண சபைகளால் தடுத்து நிறுத்த முடியாததால் தான் நாங்கள் மாகாண சபை எமது பிரச்னைக்கு தீர்வு அல்ல என்கின்றோம் என்று சொல்வதிலும் ஒரு நியாயம் இருந்திருக்கும்.

வெடுக்குநாறிமலை, வெடியரசன் கோட்டை, பண்ணை சிலை விவகாரம், தையிட்டி விகாரை, திருகோணமலை புத்தர் சிலை என்று ஒன்று மாறி ஒன்று தொடர்பாக போராடிக் கொண்டிருப்பதை விடுத்து மாகாண சபைகளை இயங்கப் பண்ணி, அதன் மூலம் இவற்றை தடுப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்று இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றோம்.

அதனால்தான் 'ஈழநாடு' இந்த 'பாழாய்போன' பதின்மூன்று தொடர்பாக அடிக்கடி வலியுறுத்தியும் வந்திருக்கின்றது.

அண்மையில் 'ஈழநாடு'வின் அதுபற்றிய தலையங்கங்களை தொகுத்து வெளியிட்ட சிலர் 'இந்தியாவின் கைக்கூலிகள்' என்று ஈழநாடு நாளிதழுக்கு ஓர் அடையாளத்தையும் வழங்கியிருந்தனர்.

பதின்மூன்றை விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்த்தமைக்கு காரணம் கண்டறிய ஆராய்ச்சி தேவையில்லை. அவர்கள் தமது ஆயுத பலத்தின் மூலம் தமது இலக்கை அடையலாம் என்று நம்பினார்கள். ஆனால், இன்று தங்களை புலிகளின் தொடர்ச்சியாகக் காட்டவேண்டும் என்று நினைப்பவர்கள், எந்தப் பலத்தால் தமது இலக்கை அடைய முடியும் என்று கருதுகிறார்கள்- நம்புகின்றார்கள் என்று தெரியவில்லை.

கடைசியாக நடந்த தமிழர் தரப்பு - ஜனாதிபதி இடையிலான பேச்சுகளின்போது, நடந்த சங்கதிகளை ஈழநாடு ஏற்கனவே செய்தியில் தந்திருந்தது. பேச்சு ஆரம்பமாகின்றபோதே, ஜனாதிபதி மாகாண சபைகளை ஆலோசனை சபை கொண்டு நிர்வகிப்பது தொடர்பாக தமிழர் தரப்பில் சிலரின் யோசனையை தூக்கிப்பிடித்துக் கொண்டு அந்த ஆலோசனை சபையை நியமித்தால் என்ன என்று கேட்டது. அந்த சபைகளை ஸ்தாபித்து மாகாண சபைகளை கொண்டு நடத்தலாம் என்பதற்காக அல்ல என்பதை புரிந்துகொள்ள அரசியல் அறிவு ஒன்றும் தேவையில்லை. அப்படியொரு யோசனையை முன்வைத்தால் தமிழர் தரப்பு அந்த விடயத்தில் இரண்டுபட்டு நிற்கும் அதனையே சாட்டாக வைத்து காலத்தை கடத்தலாம் என்பது தான். அந்த ஆலோசனை சபையை நியமிப்பது என்றாலும் அதற்கும் பாராளுமன்றின் அனுமதி தேவை. அப்படியோர் அனுமதியை ஜனாதிபதியால் பெறமுடியுமா என்பது அடுத்த கேள்வி.

ஆனால், மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒன்றை நடத்துவதெனில் அதனை யாரும் எதிர்க்க முன்வரப் போவதில்லை. அதுவும் பழைய முறையில் ஏற்கனவே, மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களுடன் அதனை கொண்டு செல்ல யாரும் தடையாக இருக்கப்போவதில்லை.

எனவே, நடக்கக் கூடியவற்றை, ஜனாதிபதியால் செய்யக் கூடியவற்றை தமிழர் தரப்பு ஒத்த கருத்துடன் முன்வைத்தால் மட்டுமே எதனையும் சாத்தியப்படுத்த முடியும். அந்தப் பேச்சுகளில் தமிழரசு எம். பிக்களும் கூட்டமைப்பு எம். பிக்களும் மாகாண சபைகளின் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஒன்றுபட்டுக் கோரிய விடயத்தில் தமிழர் தரப்புக்கள் ஒற்றுமையாக ஓரணியாகக் கோரி, தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்தமுடியுமோ அவ்வளவு விரைவாக நடத்த முயற்சிக்கவேண்டும்.

அதைவிடுத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனைகளுடன் ஜனாதிபதியிடம் சென்றால், அவற்றை இழுத்தடிக்க நாமே வழிசமைத்ததாக ஆகிவிடும்.!

**- ஊர்க்குருவி**

# கடந்த வருடம் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடும் உயர்வு

கொழும்பு, மே 19

கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் 2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியை ஒப்பிடுகையில் தற்போது சுமார் 2000 டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுத்தம் செய்யும் தினமாக அறிவிக்கத் தற்போது சுகாதார அமைச்சு முன்மொழிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 59 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அதிக டெங்கு அபாயமுள்ள வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன அவர் குறிப்பிட்டார்.

தற்போது டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் விரிவான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய சங்கத்தின் தமிழ் நூல்களுக்கான பரிசளிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 19

அவுஸ்திரேலியாவில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக தமிழ் இலக்கியம் மற்றும் கலைச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கையில், வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்றை கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தி வருகிறது.

இலங்கையில் வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் இயங்கிவருகிறது. கடந்த ஆண்டுகளில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களுக்காக நடந்த தெரிவில், பரிசுபெற்ற எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் இந்த பரிசளிப்புத் திட்டம் இம்முறையும் இலங்கை தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

இந்தத்திட்டம் கீழ்வரும் தேவைப்பாடுகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

1. கடந்த 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை ஆகிய நான்கு துறைகளில் வெளியான தமிழ் நூல்களே இந்தத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு துறையிலும் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு நூலுக்கும் தலா 50 ஆயிரம் இலங்கை ரூபா பரிசாக வழங்கப்படும்.

3. நூலாசிரியரின் முழுப் பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை அடங்கிய சுயவிபரக் குறிப்பொன்றினையும் நூலுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

4. நூலின் இரண்டு பிரதிகள், எதிர்வரும் 31-07-2023 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக இதில் தரப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. நடுவர்களின் தீர்ப்பையடுத்து பரிசுக்குத் தெரிவான நூல்கள் பற்றிய விபரம் பத்திரிகைகள், இதழ்கள், இணைய ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் என்பதுடன் பரிசு பெற்றவர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் அறியத்தரப்படும்.

6. நூலாசிரியர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், வேறெந்த நாட்டின் பிரசா உரிமையோ அல்லது வதிவிட உரிமையோ இல்லாதவராகவும், வேறெந்த நாட்டிலும் இப்பொழுது வசித்துக் கொண்டிராதவராகவும் இருத்தல் வேண்டும்.

நூல்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

Dr. Nadesan
Secretary
Australia Tamil Literary & Arts Society
No 10, THERESA STREET,
BENTLEIGH
VICTORIA 3204
AUSTRALIA
மின்னஞ்சல்:
atlas25012016@gmail.com

(அ)

# இலங்கை பங்குச் சந்தையில் இருந்து நான்கு நிறுவனங்கள் வெளியேற்றம்

கொழும்பு, மே 19

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நான்கு நிறுவனங்கள் இலங்கை பங்குச் சந்தையில் இருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, ஷாலிமார் (மலாய்) பிஎல்சி, செலின்சிங் பிஎல்சி, குட் ஹோப் பிஎல்சி மற்றும் இந்தோ மலாய் பிஎல்சி போன்ற நிறுவனங்களே இவ்வாறு வெளியேறத் தீமானித்துள்ளன.

குறித்த இந்த நிறுவனங்கள் இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான கார்சன்ஸ் குழுமத்தைச் சேர்ந்தவை.

இந்த நான்கு நிறுவனங்களின் நிர்வாக சபைக் கூட்டங்களில் நேற்றுமுன்தினம் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனங்கள் பங்குச் சந்தையை விட்டு வெளியேறும் நேரத்தில் அதன் சிறுபான்மை பங்குதாரர்களுக்கு சொந்தமான அனைத்து பங்குகளையும் வாங்க குட் ஹோப் ஏசியா ஹோல்டிங்ஸ் லிமிடெட் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நான்கு நிறுவனங்களும் பாம் எண்ணெய் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகவும், அவற்றின் தோட்டங்கள் மலேசியாவில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போதகர் ஜெரோமுக்கும் எனக்கும் தொடர்பில்லை

## மகிந்த ராஜபக்ஷ விளக்கம்

கொழும்பு, மே 19

சர்ச்சைக்குரிய போதகர்களான ஜெரோம் பெர்ணான்டோ மற்றும் உபேர்ட் ஏஞ்சலுடன் தனக்கு எந்தவிதமான தொடர்புமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பில் ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, போதகர் ஜெரோம் பெர்ணான்டோ மற்றும் சிம்பாப்பே நாட்டின் போதகர் உபேர்ட் ஏஞ்சல் ஆகியோருடன் தனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை எனக் கூறியுள்ளார்.

மேலும், தான் பிரதமராக இருந்த காலத்தில் போதகர் ஜெரோம் தன்னைச் சந்திக்க முயற்சித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

போதகர் ஜெரோமின் சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்த மகிந்த, இன நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கோ அல்லது வெறுப்புப் பேச்சுகளுக்கோ இந்நாட்டில் இடமில்லை எனவும் கூறினார்.

இதேவேளை, தான் பிரதமராக இருந்தபோது போதகர் ஜெரோமின் அலுவலகம் தன்னுடன் ஒரு சந்திப்பை கோரியிருந்தது. அப்போது போதகர் உபேர்ட் ஏஞ்சலோவும், போதகர் ஜெரோமும் எனக்கும், எனது மனைவிக்கும் சிறிய பிரார்த்தனை கூட்டத்தை நடத்தினார்கள். இதுகூட உத்தியோகபூர்வ சந்திப்பாகவே நடைபெற்றது.

இதனைத் தவிர வேறெந்த சந்தர்ப்பங்களிலும் நான் அவர்களை சந்திக்கவில்லை. இச்சந்திப்பின் படங்களே ஊடகங்களில் வெளியிடப்பட்டன. அவர்களுக்கும் எனக்கும் எந்த விதமான தனிப்பட்ட தொடர்புகளும் இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.05.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வரையறைகளற்றது இராஜதந்திரம்?

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட கடந்த சில தினங்களில் இரண்டு முக்கிய சந்திப்புகளை மேற்கொண்டிருக்கின்றார். ஒன்று, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவாலை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது, அதானி குழுமத்தின் முதலீடுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானதென்று குறிப்பிட்டிருப்பதுடன் நிலுவையில் இருக்கும் சில திட்டங்களுக்கான உடன்பாடுகள் விரைவில் கைச்சாத்திடப்படுமென்றும் குறிப்பிட்டிருக் கின்றார்.

அடுத்ததாக, உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யாவை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது, அயோத்திக்கும் இலங்கைக்குமான ஆழமான தொடர்புகள் குறித்து கலந்துரையாடியதுடன் இராமாயாண காலத்துக்குரிய இடங்களை இரு நாடுகளிலும் மேம்படுத்துவது தொடர்பிலும் உத்தரபிரதேசத்திலிருந்து அதிகளவான உல்லாச பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பிலும் மொறகொட பேசியிருக்கின்றார். இதன்போது, இராமரின் சகோதரர் இலட்சுமணனை குணப்படுத்துவதற்காக இலங்கைக்கு சஞ்சீவினி மூலிகையை அனுமர் கொண்டு வந்தாரென இராமாயாண கதை கூறுகின்றது. இதனடிப்படையில், சஞ்சீவினி மூலிகையை உத்தரபிரதேசத்தில் அதிகளவில், பயிரிட வேண்டுமென்று முதலமைச்சர் யோகி ஆதித்யாவிடம் கோரியிருக்கின்றார். இதற்கு அவர் உடன்பட்டிருக்கிறாரென இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

மொறகொட உத்தரபிரதேச முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்ற சமவேளையில், சீனாவின் யுனான் மாகாணத்தின் ஆளுநர் இலங்கைக்கு பயணம் செய்திருக்கின்றார். சீனாவின் யுனான் மாநிலத்துக்கும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் உடன்பாடொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்பாட்டின் மூலம் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு திட்டங்களை சீனா மேற்கொள்ளவுள்ளது. யுனான் மாகாணத்துக்கும் இலங்கைக்கும் குறிப்பாக, பொலநறுவை இராசதானிக்கும் இடையிலான வரலாற்று தொடர்புகளின் அடிப்படையிலேயே யுனான் மாகாணத்துடன் உடன்பாடுகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

அதே போன்றதொரு திட்டத்தை சமவேளையில் மொறகொட இந்தியாவிடம் முன்வைக்கின்றார். இராமாயண காலத்தின் வரலாற்று தொடர்பின் அடிப்படையில் உத்தரபிரதேசமும் இலங்கையும் நெருங்கிச் செயல்பட வேண்டுமென்று கூறுகின்றார். தங்களின் இராஜதந்திரம் எல்லைகளற்றது என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் தமிழர் தரப்புகளோ பழைய கதைகளை கூறி மேலும் எதிரிகளை உருவாக்கும் பணிகளையே திறம்பட முன்னெடுத்து வருகின்றது. ஒரு குழுவினர் - முக்கியமாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இந்திய எதிர்ப்பு கதைகளை தமிழ் மக்கள் மத்தியில் காவித்திரிகின்றனர். இன்னொரு குழுவினரோ, சர்வதேசத்தை நோக்கி இப்போதும் கோரிக்கைகளை முன்வைப்பதில் காலத்தை விரயம் செய்துகொண்டிருக்கின்றனர். ஆனால், கொழும்போ மிகவும் சிறப்பாக - நடுநிலை, அணிசாரா - என்னும் சுலோகங்களுடன் அவர்களது இராஜதந்திர கலையை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். முன்னர் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்னும் அடிப்படையில் வெளிவிவகாரத்தை நகர்த்தினர் - இப்போது, பொருளாதார நெருக்கடியை முன்வைத்து காய்களை நகர்த்துகின்றனர்.

உண்மையில், ஒரு நாட்டின் நலன்களுக்கான இராஜதந்திரத்துக்கு வரையறைகள் இல்லை. வட்டங்களுக்குள் முடக்கப்படுவது இராஜதந்திரமல்ல. வரையறைகளை வகுத்துக் கொள்பவர்கள் இராஜதந்திரத்தை அறியாதவர்கள். இந்த பின்புலத்தில் மிகவும் இராஜதந்திரம் மிக்கவர்கள் சிங்களவர்கள் என்றால், இராஜதந்திரத்தையே அறியாதவர்கள் தமிழர்களாவர். இதுவரையான அனுபவங்கள் இதனையே நமக்கு உணர்த்துகின்றன.

# போரின் முடிவுக்குப் பின்னர் கடந்து சென்றுள்ள 14 வருடங்களில் நிறைவு செய்யப்படாத பணிகள்

சுமார் மூன்று தசாப்த காலமாக நீடித்த போரின் முடிவின் 14 ஆவது வருடாந்த நிறைவை (மே 18) நாடு நினைவு கூர்ந்துகொண்டிருக்கிறது. இரத்தக் களரியில் முடிவடைந்த போர் மக்களின் வாழ்வில் தொடர்ந்தும் அதன் தாக்கத்தை செலுத்திக்கொண்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மாண்டு போன தங்கள் அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்துகொண்டிருக்கின்ற அதேவேளை மேலும் ஆயிரக் கணக்கான குடும்ங்கள் காணாமல்போன தங்கள் அன்புக்குரியவர்கள் விரைவில் திரும்பிவருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வழமைபோன்று அரசாங்கம் போர் வெற்றியைக் குறிக்கும் முகமாக மே 19 நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருக்கிறது. இது நாட்டின் பெரும்பான்மையினரின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக அமைகிறது.

போர் முடிந்துவிட்டபோதிலும் அதற்கு வழிவகுத்த பிரச்னைகளும் அவற்றில் இருந்து தோன்றுகின்ற புதிய பிரச்னை களும் தொடர்ந்தும் தொல்லையைக் கொடுத்துக் கொண்டிருப்பதுடன் நாடு அதற்கு இருக்கின்ற ஆற்றல்களை பயன்படுத்தி முன்னேறுவதற்கு குந்தகமாக அமைகின்றன.

நாடு தொடர்ந்தும் பிளவுபட்ட ஒரு குடும்பத்தைப் போன்றே காணப்படுகிறது. பிளவுகளை குணப்படுத்தாதவரை நாடு வெற்றிபெற முடியாது. பிளவுகளைக் கணப்படுத்துவதற்கு உண்மையான இணக்கப்போக்குடைய இலங்கையை உருவாக்கும் நோக்குடைய ஒரு அரசியல்ஞானிக்குரிய பண்புகளைக் கொண்ட தலைமைத்துவம் தேவை.

காணாமல்போனோர் தொடர்பான பிரச்னையைக் கையாளுவது நிறைவு செய்யப்படாத மிகவும் அவசரமான பணியாக இருக்கிறது. மக்களின் உணர்வுகளை திருப்திப்படுத்தக்கூடிய முறையில் இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். தங்களது கவலை குறித்து அரசு அக்கறை செலுத்தி நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அரசியலமைப்பின் பிரகாரம் அதிகாரப் பரவலாக்கத்துக்கான மாகாணசபைகள் முறைமை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வது இரண்டாவது முக்கியமான பணியாகும். மாகாண சபைகளுக்கு போதுமான நிதி வளங்கள் கிடைக்கச் செய்யப்படவேண்டும். மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதி செய்யுமுகமாக மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படக்கூடியதாக ஆளுநர்களின் அதிகாரங்களை குறைப்பதற்கு மாகாணசபைகள் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதும் அவசியமாகும்.

நிறைவுசெய்யப்படாத வேறு பணிகளும் இருக்கின்றன. ஆனால் மேற்கூறப்பட்ட இரு பணிகளையும் கையாளுவதற்கு உண்மையான அக்கறை இருக்குமானால் மற்றையவை தன்பாட்டில் தொடரமுடியும்.


நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை தோற்றுவிப்பதற்காகவும் சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார தடைகள் விதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் அதிகரிப்பதை தடுக்கவும் இந்த பணிகளை அவசரமாக முன்னெடுக்கவேண்டியிருக்கிறது. சர்வதேச தடைகள் போர்க்குற்றங்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீதான பயணத்தடைகளின் வடிவில் ஏற்கனவே பிரச்னையை கொடுக்கத் தொடங்கிவிட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதாரச் சலுகையை பாதுகாக்கவேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி ஆரம்பித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது. இந்த பேச்சுவார்த்தைகள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நேர்மறையான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி விரிவுபடுத்தவிருப்பதாக ஊடங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவை தொடர்பில் தனது நோக்கங்களை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் என்றும் இந்த விவகாரத்தில் எதிரணி அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை அவர் ஆரம்பிக்கவேண்டும் என்றும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். அவ்வாறு செய்தால்தான் காணப்படக்கூடிய இணக்கப்பாடுகள் சகல தரப்புகளையும் அரவணைப்பதாகவும் நாட்டின சகல இன,மத சமூகங்களின் உச்சபட்ச ஆதரவைப் பெறக்கூடியதாகவும் இருக்கும்.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 19 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 05
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அமாவாசை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**சிம்மம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். திருப்தி உண்டாகும்.

**மகரம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**கும்பம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

# காங்கிரஸின் நிலைப்பாடே பா. ஜ.கவினதும்: தமிழீழ விடுதலையை நாம் அங்கீகரிப்போம்!

## விடுதலை சிறுத்தைகளின் திருமாவளவன்

சிதம்பரம், மே 19

காங்கிரஸின் நிலைப்பாடு தான் பா. ஜ. கவின் நிலைப்பாடாகும். ஆனால் காங்கிரஸ் ஆட்சியை விட்டுப் போய் 9 ஆண்டுகள் ஆகியும் இதுவரை பா. ஜ. க. நீங்கள் எதிர்பார்த்து போல ஓர் அங்குலமாவது முன்னேறி இருக்கிறதா என்று சிந்தித்து பார்க்க வேண்டும். தமிழீழ விடுதலையை தொடர்ந்து அங்கீகரிப்பதுதான் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிலைப்பாடு என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம். பி. தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து நடத்தப்பட்ட நினைவேந்தல் நேற்று முன்தினம் இரவு சிதம்பரத்தில் நடைபெற்றது.

இதில், பேசிய அவர், தொடக்க காலம் முதலே தமிழீழ விடுதலைக்காக போராடி வருவது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி.

இலங்கை பிரச்னையை சர்வதேச பார்வையோடு அணுக வேண்டிய தேவை இருக்கிறது. சர்வதேச பார்வையோடு அணுகினால் மட்டுமே தீர்வு காண முடியும். கூட்டணியில் இருக்கும்போது போரை நிறுத்த வலியுறுத்தி நான் மட்டும்தான் உண்ணாவிரதம் இருந்தேன். பா. ம. .க நிறுவுநர் ராமதாஸ் நேரில் வந்து அதை முடித்து வைத்தார். நாம் இருவரும் சேர்ந்து போராடலாம் என்று கூறி அப்போது அவர் அந்த உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்தார்.

தி. மு. க. ஆட்சியை கலைக்க திருமாவளவன் முயற்சி செய்கிறார் என அப்போது உளவுத்துறை கூட அறிக்கை கொடுத்தது. இலங்கையில் சிங்கள ஆதிக்கம் நடந்தது. இலங்கையிலும் வெறுப்பு அரசியல். இங்கும் வெறுப்பு அரசியல். இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிரான வெறுப்பு அரசியலாக இருந்தது. இந்தியாவில் முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு எதிரான மதவாத வெறுப்பு அரசியல் கட்டமைக்கப்படுகிறது.

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என வாதிடுவது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. காங்கிரஸின் நிலைப்பாடுதான் பா. ஜ. கவின் நிலைப்பாடாகும். ஆனால் காங்கிரஸ் ஆட்சியை விட்டுப் போய் 9 ஆண்டுகள் ஆகியும், இதுவரை பா. ஜ. க. நீங்கள் எதிர்பார்த்துபோல ஓர் அங்குலமாவது முன்னேறி இருக்கிறதா என்று சிந்தித்து பார்க்க வேண்டும். தமிழீழ விடுதலையை தொடர்ந்து அங்கீகரிப்பதுதான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிலைப்பாடு - என்றார்.

# குழந்தைகளை கல்லூரிகளில் சேர்க்க நகைகளை விற்கிறார்கள் பெற்றோர்!

சென்னை, மே 19

குழந்தைகளைக் கல்லூரியில் சேர்ப்பதற்காக நாளொன்றுக்கு 10 முதல் 12 கிலோ பழைய தங்க நகைகள் பெற்றோர்களால் விற்பனை செய்யப்படுவதாகவும், ஒரே வாரத்தில் ரூ.5 முதல் 6 கோடி வரை பழைய நகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தங்க நகை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

கோவை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக நகைக் கடைகளுக்கு பழைய நகைகள் விற்பனை செய்வது அதிகரித்திருக்கின்றன. பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியாகி இருக்கும் நிலையில் உயர் கல்விக்காக மாணவ-மாணவிகள் கல்லூரிகளில் விண்ணப்பித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கல்லூரிகளில் நன்கொடை, கல்விக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக நடுத்தர மற்றும் ஏழை குடும்பத்தினர் தங்களிடம் உள்ள நகைகளை நகைக் கடைகளில் விற்று வருகின்றனர். அடகு வைத்தால் வட்டி உள்ளிட்ட நிதி நெருக்கடியில் தள்ளப்படுவோம் என்பதால், நகைகளை விற்று பணத்தை பெற்றுச் செல்கின்றனர்.

அந்த வகையில் கோவை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக கல்லூரிகளில் சேர்க்கை நடந்து வரும் நிலையில், நகைக் கடைகளில் பெற்றோர்கள் பழைய நகைகளை விற்பனை செய்வது அதிகரித்து வருக்கின்றன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நாளொன்றுக்கு சுமார் 10 முதல் 12 கிலோ அளவிலான தங்க நகைகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மதிப்பு ரூ.5 கோடி முதல் 6 கோடி வரை இருக்கும் என தங்க நகை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கூறுகின்றனர்.

(அ)

# தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தடையில்லை!

சென்னை, மே 19

ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லுபடியாகும் எனவும் உயர்நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது.

பொங்கல் திருநாளையொட்டி, தமிழகத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிக்கு, உயர்நீதிமன்றம் 2014 இல் தடை விதித்தது.

இதை எதிர்த்து தமிழகம் முழுதும் இளைஞர்கள், 2017இல் போராட்டத்தில் ஈடுபட்டனர், இது நாடு முழுதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதையடுத்து, மிருகவதை தடுப்பு சட்டத்தில் தமிழக அரசு. 2017இல் திருத்தம் செய்தது. அந்த அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்த பின், தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடர்ந்து நடக்கின்றன.

ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு தடை விதிக்கக் கோரி பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், உச்ச நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஐந்து நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு வழங்கிய ஒருமித்த தீர்ப்பில், ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தமிழர்களின் கலாசாரம் என்றாலும் கூட விளையாட்டின்போது நேரும் துன்புறுத்தல்களைத் தவிர்க்க உரிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளதுடன் ஜல்லிக்கட்டுக்கு எதிராக தொடரப்பட்ட அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

# புதிய மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, மே 19

மதுரை, சிவகங்கை உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆட்சித் தலைவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் அரியலூர், புதுக்கோட்டை, நாமக்கல், செங்கல்பட்டு, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களுக்கு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் உரையாடினார்.

(அ)

# டெங்கு ஒழிப்பு அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தினால் வழக்கு

கொழும்பு, மே 19

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பிரவேசிக்கும் சுகாதார அதிகாரிகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டால், அது தொடர்பில் வழக்கு தொடரவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை, விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் மேல் மாகாணத்தில் 3,142 டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேல்மாகாண போக்குவரத்துப் பிரிவினர் நடத்திய சோதனை நடவடிக்கைகளின்போது, 3,344 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

முப்படையினர், பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி அலுவலக அதிகாரிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் உட்பட 7,351 பேர் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தில் பங்குபற்றியுள்ளனர்.

# மக்கள் போராட்டத்தின்போது என்னிடம் சவேந்திர சில்வா ஆலோசனை கேட்டார்!

## சரத் பொன்சேகா பரபரப்பு தகவல்

கொழும்பு, மே 19

**"மக்கள் போராட்டத்தின்போது இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா என்னிடம் ஆலோசனை பெற்றது உண்மைதான். அப்போது மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டாம் என நான் அறிவுறுத்தல் வழங்கினேன்."**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பாராளுமன்ற வளாகம் சுற்றிவளைக்கப்பட்ட தருணத்தில் சவேந்திர சில்வா இரு தடவைகள் என்னுடன் கதைத்தார். போராட்டத்துடன் எனக்கு தொடர்பு இருந்தது. நான் பாராளுமன்ற உறுப்பினரும் கூட. எனவே, பாராளுமன்ற உறுப்பினருடன் கதைப்பதற்கு பாதுகாப்பு தரப்பினருக்கும் தடை இல்லை. அத்துடன், நான் இராணுவப் பிரதானியாக இருந்தவன். அந்தவகையில் கதைத்திருக்கலாம்.

மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தவேண்டாம். முடியுமென்றால் அரசியல்வாதிகளை வெளியேற்றுங்கள். உங்கள் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். பாதுகாப்புத்தடையை மக்கள் உடைத்தால்கூட சுட வேண்டாம். அரசியல்வாதிகளை அங்கிருந்து வெளியேற்றுவது தான் சிறந்தது என நான் ஆலோசனை வழங்கினேன்.

இராணுவத் தளபதி கவலையுடன்தான் அப்போது இருந்தார். அவரின் வீடும் அங்குதான் இருந்தது. என்னிடம் மட்டுமல்ல ஏனைய இராணுவத் தளபதிகளிடமும் ஆலோசனை பெறும் உரிமை அவருக்கு உள்ளது. அதில் தவறு கிடையாது - என்றார். (அ)

# தனுஷ்க குணதிலக மீதான 3 குற்றச்சாட்டுக்கள் வாபஸ்

கொழும்பு, மே 19

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் தொடரப்பட்டுள்ள பாலியல் வழக்கின் 4 குற்றச்சாட்டுகளில் 3 குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய அரச சட்டத்தரணியால் குறித்த குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

29 வயதான பெண்ணொருவர், தனுஷ்க குணதிலக்க மீது பாலியல் குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கு தொடர்ந்திருந்தார்.

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்காக கடந்த நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தபோது, 32 வயதான தனுஷ்க குணதிலக்க மீது இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

பாலியல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தனுஷ்க குணதிலக்கவுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடவுச்சீட்டு அலுவலகத்தில் பொதுமக்கள் காவல்

கொழும்பு, மே 19

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்யாமல் பல நாட்கள் வரிசையில் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கடும் நெரிசல் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஒரு நாளைக்கு 500 விண்ணப்பதாரர்கள் மட்டுமே தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா, யாழ்ப்பாணம் என பல்வேறு தொலைதூர பிரதேசங்களில் இருந்து மக்கள் அந்த வரிசையில் காத்து நிற்கின்றனர்.

சிலர் சிறு குழந்தைகளை அழைத்து வருகின்றனர். மேலும் பலர் தங்கள் குழந்தைகளுடன் ஒரே இடத்தில் இரவைக் கழிப்பதாகவும் தெரிவித்தனர். (அ)

# இலங்கைக்கு மருந்துப்பொருட்களை அன்பளிப்பாக வழங்கியது பிரேசில்!



கொழும்பு, மே 19

பிரேசில் கூட்டுறவு முகமை மூலம் பிரேசில் குடியரசு இலங்கைக்கு மருந்துவப் பொருட்கள் உள்ளிட்ட 10,000 இன்சுலின் குப்பிகள் மற்றும் 08 மில்லியன் பாலிப்ரொப்பிலீன் குறிப்புகளை வழங்கியது.

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் வைத்து நேற்று முன் தினம் இலங்கைக்கான பிரேசில் தூதுவர் செர்ஜியோ லூயிஸ் கேனஸிடம் இருந்து வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மருத்துவப் பொருட்களை நன்கொடையாகப் பெற்றுகொண்டார்.

இலங்கைக்கும் பிரேசிலுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை எடுத்துரைத்த வெளிவிவகார இராஜாங்க அமைச்சர், பிரேசில் அரசாங்கத்தின் இந்த நல்லெண்ணச் செயலுக்குப் பாராட்டு தெரிவித்தார். (அ)

# இரத்மலானையில் தரையிறங்கிய காட்டுத்தீ அணைக்கும் விமானங்கள்

கொழும்பு, மே 19

காட்டுத்தீயை அணைக்கும் விமானங்கள் மூன்று இரத்மலானை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தரையிறங்கியுள்ளன.

அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த இந்த விமானங்கள் இரத்மலானை விமான நிலையத்தில் சேவை வசதிகளை பெற்றுக் கொள்வதற்கும், ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் காட்டுத்தீயை அணைப்பதற்கான தண்ணீரை ஏற்றிச்செல்வதற்கும் இங்கு வருகை தந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மாதாந்த வருமானம் அதிகரிக்கும் என முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் கோவிட் நிலைமைக்குப் பின்னர் இரத்மலானை விமான நிலையத்தின் உள்நாட்டு விமானச் சேவைகள் மற்றும் சர்வதேச விமானச் சேவைகள் தற்போது மேம்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு உள்ளூர் நிறுவனங்களுக்கு விமானங்களை நிறுத்தும் இடங்களை வழங்குவதன் மூலம் கணிசமான வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# "அதானி நிறுவன முதலீடுகள் இலங்கைக்கு முக்கியமானவை"

கொழும்பு, மே 19

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் முதலீடுகள் இலங்கைக்கு முக்கியமானவை என இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை சந்தித்தபோது இதனை குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

சரிந்த பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதிலும் புத்துயிர் பெறுவதிலும் கவனம் செலுத்தி வரும் இலங்கைக்கு அதானி குழுமத்தின் முதலீடு முக்கியமானது.

2020 இல் சர்ச்சைக்குரிய மையமாக மாறிய கொழும்பு துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதும் இதில் அடங்குகிறது.

இந்த ஆண்டு பெப்ரவரியில் அதானி குழுமம் இலங்கையின் வடக்கே மன்னார் மற்றும் பூநகரியில் இரண்டு காற்றாலை மின் நிலையங்களை அமைக்க ஒப்புதலைப் பெற்றது.

இந்த நிலையில் 500 மெகாவாட் காற்றாலை மின் திட்டங்களுக்கான மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் விரைவில் கையெழுத்திடுவார்கள்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கேபிள் இணைப்பு தொடர்பாக இந்தியாவுடன் மிக விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட உள்ளது.

இதேவேளை, தமிழர்களின் பிரச்னையில் இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நீண்ட கால கோரிக்கை குறித்து புதிதாக சிந்திக்கவேண்டிய நேரம் இது -என்றார். (அ)

# வெலிக்கடை பொலிஸாரால் கைதான பெண் உயிரிழப்பு

கொழும்பு, மே 19

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் 42 வயதான பெண் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தங்க நகை திருட்டுச் சம்பவம் தொடர்பில் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

42 வயதான ஆர்.ராஜகுமாரி எனப்படும் குறித்த பெண் கடந்த 11 ஆம் திகதி வெலிக்கடை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமது வீட்டில் பணிபுரிந்த போது தங்க நகையைத் திருடியதாக குறித்த பெண் மீது தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளரான சுதர்மா ஜயவர்தன வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட தினத்தன்று இரவு ராஜகுமாரி வெலிக்கடை பொலிஸாரினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

எனினும், அவர் கடுமையாக தாக்கப்பட்டதால் தான் உயிரிழந்ததாக அவரின் கணவர் செல்வதுரை யேசுராஜ் குறிப்பிட்டார்.

பொலிஸாரின் அறிக்கையின் பிரகாரம் பிரேத பரிசோதனையில் அவரது மரணம் குறித்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பெண்ணின் சடலம் கடந்த 12ஆம் திகதி உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், 13ஆம் திகதி பதுளை தெமோதரையில் சடலத்தை அடக்கம் செய்ய உறவினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனிடையே, உயிரிழந்த பெண்ணின் கணவர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து தனது மனைவியின் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்துள்ளார். (அ)

# ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்க மொட்டு கட்சியினர் முழு ஆதரவு

## எதிரணிகள் போர்க்கொடி

கொழும்பு, மே 19

**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து அதன் தலைவர் ஜனக ரத்நாயக்கவை நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் செயற்பாடுகளை கட்சி என்ற ரீதியில் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், சட்டத்தரணி சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனக ரத்நாயக்கவை நீக்குவதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக முன்னிற்கும் ஜனக ரத்நாயக்கவுக்கு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் தாம் முன்னிற்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து அதன் தலைவர் ஜனக ரத்நாயக்கவை நீக்குவதற்கான பிரேரணை எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு



எடுத்துக் கொள்ளப்படவுள்ளதுடன், அன்று மாலை அது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

(அ)

# முதலிடம் பெற்றுள்ள 'கிளிநொச்சி'!

கொழும்பு, மே 19

கிளிநொச்சி என பெயரிடப்பட்டுள்ள சிறுகதை சர்வதேச பரிசுக்காக போட்டியில் 56 உறுப்பு நாடுகளின் 6,641 சிறுகதைகளை முறியடித்து முதலிடம் பெற்றுள்ளது.

நியூஸிலாந்தின் ஒக்லாந்தில் வசிக்கும் குடும்ப மருத்துவரான ஹிமாலி மெக்கின்ஸ், என்பவரின் இந்த சிறுகதை, பசுபிக் பிராந்தியத்திற்கான பொது நலவாய சிறுகதைப் பரிசை வெற்றி கொண்டுள்ளது.

ஒரு தாய், தமது மகனை தேடும் கதையே இந்த சிறுகதையில் இடம்பெற்றுள்ளது. இந்த சிறுகதையில், ஹிமாலி மெக்கின்ஸ், இலங்கையின் மலையக தமிழர், கிளிநொச்சி நியூசிலாந்து மற்றும் இலங்கை, தமிழ் மற்றும் சிங்களம், குடும்ப விசுவாசம், பாலினம், வர்க்கம் மற்றும் சமூக சமத்துவமின்மை, போர், புலம்பெயர் வாழ்வு மற்றும் நமது அடிப்படைத் தேவை ஆகியவற்றை ஆராய்ந்துள்ளார்.

திருடவோ, அழிக்கவோ அல்லது இழக்கவோ முடியாதது அன்பு என்பதை அவர் இந்த சிறுகதையின் மூலம் நிரூபித்துள்ளார்.

நீண்ட ஒப்பந்தத் தொழிலாளர்களின் வரிசையில் இருந்து வரும் மலையகத் தமிழ் தேயிலை பறிக்கும் தொழிலாளியான நிஷாவைப் பற்றிய கதையே இந்த சிறுகதையில் இடம்பெற்றுள்ளது.

அவர் ஒரு நியூசிலாந்தரை மணந்து தனது மகனுடன் அங்கு செல்கிறார் - பின்னர் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆயுதம் ஏந்துவதற்காக இலங்கைக்கு திரும்புகிறார்.

பின்னர் தனது மகனை கண்டுபிடிக்கும் ஆசை



யில், வட இலங்கையின் கிளிநொச்சியில் உள்ள போர்ப் பகுதிக்குள் செல்கிறாள்.

தாம், தமது வாழ்நாளின் பெரும்பகுதியை இலங்கைக்கு வெளியே வாழ்ந்திருந்தாலும், 2007 - 2009 வரை கொடூரமான உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் இலங்கையில் பணிபுரிந்த போது எத்தனையோ அட்டூழியங்கள், ஆறாத காயங்களை சந்தித்ததாக எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலக்கிய இதழான "கிளிநொச்சி" விரைவில் இணையத்தில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பிரதமர் அலுவலகத்தின் அதிசொகுசுக் காரை திருமணத்திற்கு பயன்படுத்தியவருக்கு சிறை!

கொழும்பு, மே 19

பிரதமர் அலுவலகத்தின் சொகுசுக் கார் பழுது பார்ப்பதற்காக வழங்கப்பட்டிருந்தநிலையில் அதனை திருமணத்துக்கு பயன்படுத்தியவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கார் பழுது பார்க்கும் நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரியின் கோரிக்கைக்கமைய, திருமண நிகழ்வுக்காக கார் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதனைக் கொண்டு சென்ற வாடகை வாகனச் சாரதிக்கே கொழும்பு உயர் நீதிமன்றம் 15 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருடங்கள் சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

அத்துடன் 150000 ரூபாய் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்ப ட்டபோது, திருடப்பட்ட பொருட்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட தயான் நிரங்க என்ற நபரை அபராதம் செலுத்தும் வரை வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட நபர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, சிறைத் தண்டனை நிறைவேற்றப்பட்டால், அது பிள்ளைகளின் வாழ்க்கையை பாதிக்கும் என்பதனால் ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தை ஒப்படைத்த வாகனப் பழுதுபார்க்கும் நிறுவனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் இந்த வழக்கில் முதலாவது குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிரான வழக்கை ஜூலை மாதம் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு நீதிபதி உத்தரவிட்டார்.

பிரதமர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட வாகனத்தை இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பயன்படுத்துவது மிகவும் பாரதூரமான குற்றமாகும் என நீதிபதி தெரிவித்தார்.

(அ)

# பல நாள் மீன்பிடிக் கலத்தில் பெருமளவு போதைப்பொருள்!

## 6 பேர் கடற்படையினரால் கைது

கொழும்பு, மே 19

தென் கடற்பரப்பில் பெருமளவிலான போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடிக் கப்பலுடன் 06 சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து நடத்திய விசேட நடவடிக்கையின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசேட தேடுதல் நடவடிக்கையில், பெருமளவிலான போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற பலநாள் மீன்பிடிக் கப்பலுடன் 06 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடிக் கப்பல் மற்றும் சந்தேகநபர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(அ)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாற்றம்



யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான நேற்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அதன் தலைமை அலுவலகத்தின் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது.

போரில் புது மாத்தளனில் தனது கணவரைப் பலி கொடுத்த திருமதி தக்ஷாயினி அருள்நேசயோகநாதன் அஞ்சலிச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளர் சண்.தயாளன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஏராளமானோர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உணர்வுடன் அருந்திச் சென்றமையைக் காண முடிந்தது.

(அ)

# நுவரெலியாவில் நடந்த யுத்த வெற்றி வைபவம்

## உயிர் நீர்த்த இராணுவத்தினருக்கு அஞ்சலி



கொழும்பு, மே 19

இலங்கையில் 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து 14 வருடங்கள் பூர்த்தியை நினைவு கூரும் நிகழ்வு நுவரெலியா இலங்கை சிங்க ரெஜிமென்ட் 3 ஆவது படையணி முகாமில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யுத்தத்தில் நாட்டுக்காக உயிர் நீர்த்த இராணுவத்தினரை நினைவு கூரும் முகமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் உயிர் நீர்த்த இராணுவத்தினரை நினைவு கூர்ந்து மத குருமார்களின் மத அனுஷ்டானங்களும் இடம்பெற்றன.

மேலும் யுத்தத்தில் உயிர் நீர்த்த இராணுவ வீரர்களின் குடும்பத்தவர்கள், அரச அதிகாரிகளான நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, பிரதேச செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள் மற்றும் முப்படைகளின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பல்வேறு வைரஸ்கள் பரவுவதைத் தடுக்க சுகாதார முறைகளை கடைப்பிடியுங்கள்!

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 19

**கோவிட்-19 வைரஸ் உட்பட பல்வேறு வகையான வைரஸ்கள் பரவுவதைத் தடுப்பதற்கு, முன்னர் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பரிந்துரைகளை, மக்கள் உரிய வகையில் பின்பற்ற வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.**

தற்போது, கணிசமான எண்ணிக்கையில் கோவிட்-19 தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

அத்துடன் இறப்புகளும் பதிவாவதால் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பல வைரஸ் தொற்றுகள் சமூகத்தில் பரவலடைந்து வருகின்றன.

இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை எனில், பாரிய அழிவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

எனவே, முன்னதாக அறிவிக்கப்பட்டவாறு, முகமூடிகளை அணிதல், கைகளை சுத்தமாக கழுவுதல், பொதுக் கூட்டங்களைத் தவிர்த்தல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவதால் அதில் உள்ள பாதிப்புகளில் இருந்து விடுபட முடியும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொது மக்களைக் கோரியுள்ளது.

(அ)

# கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை ஜூன் 12 முதல் 25 வரை திறந்திருக்கும்!

அம்பாறை, மே 19

வரலாற்றுப்பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி திறக்கப்படும். 13 தினங்களின் பின் மீண்டும் அது ஜூன் 25ஆம் திகதி மூடப்படும்.

-இவ்வாறு அம்பாறைமாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் கதிர்காமம் காட்டுப் பாதை தொடர்பிலான

முன்னோடிக்கூட்டம் செவ்வாய்க்கிழமை பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஒருமாத கால இடைவெளியில் நடைபெற இருக்கின்றது.

உகந்த மலை முருகன் ஆலய வருடாந்த திருவிழா ஜூலை மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் 2 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

காட்டுப்பாதை திறக்கும்

அக்காலப்பகுதியில் காட்டுப்பாதையால் பயணிப்போர் பொலித்தீன்பாவனையை முற்றாகத் தடைசெய்யவேண்டும். அன்னதானம் வழங்குவோர் லன்ச் சீற்றையும் சிறிய தண்ணீர் போத்தலையும் தவிர்க்கவேண்டும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக 31 தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்படவேண்டும்.

காட்டுப்பாதையால் செல்லும் யாத்திரீகர்களுக்கான பாதுகாப்பை பொலிஸ், வனஜீவராசிகள் திணைக்களம், இராணுவம் என்பன இணைந்து வழங்கும்.

உகந்தையயடுத்துள்ள குமண பறவைகள் சரணாலய முன்றலில் யாத்திரீகர்கள் கணக்கெடுப்பொன்றுக்கு உள்ளாக்கப்படுவார்கள். கடந்தாண்டு 25ஆயிரம் பாதயாத்திரீகர்கள் பயணித்துள்ளனர். இவ்வாண்டு சுமார் 45 ஆயிரம் அடியார்கள் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவமும் வனஜீவராசிகள் திணைக்களமும் இணைந்து இக்கணக்கெடுப்பை எவ்வித கெடுபிடியுமின்றி நடத்துவர்.

ஆலயவளாகத்தில் மின்சார வசதி சுகாதாரவசதி யாத்திரீகர்களுக்கு நிறைவாக ஏற்படுத்திக்கொடுக்கப்படும். மலசலகூடவசதியும் சுத்தமாக வழங்கப்படும்.போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது.

(அ)

# குடியகல்வுத் திணைக்கள சேவைகளுக்காக பணம் பெறுவோரை கைது செய்ய ஏற்பாடு

கொழும்பு, மே 19

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக, பணத்தைப் பெறும், வெளியாட்களைக் கைதுசெய்வதற்காக, குற்றப் புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள வளாகத்தில், கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருபவர்களுக்கு, அந்த சேவைகளை விரைவாக பெற்றுத் தருவதாக கூறி, பணம் பெற்றுக்கொள்ளும் குழுவொன்று தொடர்பான தகவல்கள் வெளியாகின.

சில சந்தர்ப்பங்களில், குறித்த நபர்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, பொறுப்பு வாய்ந்த தரப்பினர், இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இதற்கமைய, குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளின் உதவி பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவருவது தொடர்பில் ஆராய குழு

கொழும்பு, மே 19

சமுர்த்தி அபிவிருத்தி வங்கியை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது தொடர்பிலான நடைமுறை மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் நிதி அமைச்சு, மத்திய வங்கி, சமூக நலன்புரி பயனாளர் சபை ஆகியவற்றின் அதிகாரிகள் உள்ளடங்குவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று மன்னாரில் சிறப்புற நடந்தது




மன்னார், மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயக பகுதிகளில் நேற்று உணர்வுபூர்வமாக தமிழ் அனுஷ்டிக்கப்பட்டது. மன்னாரிலும் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 8 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(அ)



# கோணேஸ்வரத்தில் வழிபட்டார் செந்தில்

திருமலை, மே 19

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் நேற்றுக் காலை காலை திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதில் கிழக்கு மாகாண சபையின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# இராமாயண காலத்து இடங்களை அபிவிருத்தி செய்வது குறித்து பேச்சு



புதுடில்லி, மே 19

உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை, இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைக்கும் அயோத்திக்கும் இடையிலான ஆழமான உறவு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார உறவுகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் இராமாயண காலத்துடன் தொடர்புடைய பல்வேறு இடங்களை மேம்படுத்துவது குறித்தும் அவர்கள் விரிவான கலந்துரையாடலை நடத்தினர்.

இதன் மூலம் இந்தியாவின் குடிமக்கள், குறிப்பாக உத்தரபிரதேசம், இலங்கையில் உள்ள இராமாயண தலங்களைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இந்தநிலையில் இராமரின் சகோதரன் இலட்சுமணனைக் குணப்படுத்துவதற்காக நடப்பட்ட அனுமான் கொண்டு வந்ததாக கூறப்படும் சஞ்சீவனி மூலிகைச் செடிகளை உத்தர பிரதேசத்தில் பெரிய அளவில் நடவேண்டும் என்ற இலங்கைத் தூதுவரின் கோரிக்கையை, உத்தர பிரதேச முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார் என்று இந்திய செய்தித்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

(அ)

# நவீனமா? யூத பழமைவாதமா? முரண்பட்ட முகம் காட்டும் இஸ்ரேலின் எதிர்காலம் என்னவாகும்?

பௌலா ரோசாஸ்

யூரோவிஷன் இசை நிகழ்ச்சிக்கு இஸ்ரேல் அரசு தனது பிரதிநிதியாக ஒரு திருநங்கையை அனுப்புமளவுக்கு முற்போக்காக இருந்தாலும், மறுபுறம் "சப்பத்" தினத்தன்று பொதுப் போக்குவரத்தைக் கூட அனுமதிக்காத அளவுக்கு "மதம் சார்ந்த நாடாக" உள்ளது. ஒரே இடத்தில் இரண்டு இணையான உலகங்கள் இருப்பதை மத்திய கிழக்கு நாடுகளில் புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கும் எட்கர் கெரெட்டை விட பலர் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர்.

1998ஆம் ஆண்டு யூரோவிஷன் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற டானா இன்டர்நேஷனல் என்ற மூன்றாம் பாலினத்தவரை உதாரணமாகக் காட்டி, ஒரு நாட்டில் முற்போக்கான சிந்தனையும், பழமைவாதமும் நிறைந்திருப்பதை விளக்கினார் கெரெட்.

இஸ்ரேல் சுதந்திரம் பெற்று மே 14-ம் தேதியன்று 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் அவரிடம் பேசியபோது,

அப்போது பேசிய அவர், இது போன்ற இருவேறு தன்மைகள் இருப்பதால் கலாச்சார வளம் அதிகரித்தாலும், இது நிலையாக நீடித்திருக்கும் எனக்கருத முடியாது என எச்சரித்தார். தொடர்ந்து பேசிய அவர் இஸ்ரேலியர்கள் நேரெதிரான இருவேறு குணாதிசயங்களைக் கொண்ட மக்களாக இருப்பதை சுட்டிக்காட்டினார்.

"அது ஒரு வழக்கமான கலவையாக இல்லாமல் பெரும் வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது."

"ஆனால் இப்போது இந்த இருவேறு தன்மைகளில் எதற்கு முக்கியத்துவம் அளிப்பது என்பதில் இஸ்ரேலிய சமூகங்களிடையே சச்சரவுகள் அதிகரித்துள்ளன. முதலில் முற்போக்கான சிந்தனைக்கும், அதன் பின் யூதமத சம்பிரதாயங்களுக்கும் முக்கியத்துவம் அளிப்பதா அல்லது முதலில் மதத்துக்கு முக்கியத்துவம் அளித்து விட்டு பின்னர் முற்போக்கான சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதா," என்பதில் தான் குழப்பம் நிலவுகிறது.

### 'தவறான அறிவியல் புனைவு'

இந்த சச்சரவுகள், 1948-ம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு பிறந்த போதே தொடங்கிவிட்டன. தீவிர வலதுசாரி சிந்தனையும், மரபுவழி யூத சிந்தனையும் கொண்ட கூட்டணி ஆட்சி கடந்த நவம்பர் மாதம் அமைந்த பின் இந்த சச்சரவுகள் மேலும் மோசமடைந்து வருகின்றன.



இஸ்ரேல் நாட்டின் அறிவு சார் பெருமக்களைப் போலவே, 55 வயதான எழுத்தாளர் எட்கர் கெரெட்டும், அந்நாட்டு அரசின் சர்ச்சைக்குரிய நீதித்துறை சீர்திருத்தச் சட்டத்தை எதிர்த்து கடந்த சில வாரங்களாக நாட்டின் பெரும்பாலான நகரங்களில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்றார். இது போன்ற சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் இறையச்சம் சார்ந்த ஆட்சி அமைவதற்கான ஆபத்து ஏற்படும் என முற்போக்குவாதிகள் அஞ்சுகின்றனர்.

சடன்லி (**Suddenly**), எ நாக் ஆன் தி டோர் (**A Knock on the Door**) மற்றும் பிஜ்ஜீரியா காமிகேஸ் (**Pizzeria Kamikaze**) போன்ற கதைகளை எழுதி உலகப் புகழ்பெற்ற எட்கர் கெரெட், தமது நாட்டின் அடையாளத்தையே இந்த அரசியல் பிரச்னைகள் மாற்றி விட்டதாக நம்புகிறார்.

"ஒருவர் ஒரு நல்ல அறிவியல் புனைகதையை எழுதினால், அதற்கு அடுத்ததாக அந்த கதைக்கு நேர்மாறான கதையுடன் ஒரு திரைப்படம் திரைக்கு வருகிறது. இஸ்ரேலைப் பொறுத்தளவில் ஒரு மோசமான அறிவியல் புனைக்கதையை எழுதி, அந்த கதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நாடாகவே திகழ்கிறது," என 1902-ம் ஆண்டு வெளியான தி ஓல்ட் நியூ லேண்ட் (**The Old New Land**) என்ற அறிவியல் புனைகதை அந்நாட்டை ஒரு யூதமத நாடாக மாற்றியதை சுட்டிக்காட்டி குறிப்பிடுகிறார் கெரெட்.

தாம் "மதத்துக்கு முன்பு சுதந்திரம் கேட்கும்" மக்களின் பக்கம் நிற்பதாகவே குறிப்பிடும் கெரெட், மறுபுறம் பிரிவினைவாதம் தொடர்ந்து மேலோங்குவது குறித்தும்,



ஒவ்வொரு குடும்பத்திலும் இது போன்ற நிலை காணப்படுவது குறித்தும் எச்சரிக்கிறார்.

உதாரணமாக, எழுத்தாளர் கெரெட் அறிவியலுக்கு முக்கியத்துவம் அளித்தாலும், அவரது சகோதரர் தீவிர இடதுசாரியாகவும், அவரது சகோதரி பழமையான மதக் கோட்பாடுகளுடனும் வாழ்கின்றனர். இருப்பினும் அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதாக அவர் கூறினார்.

'மக்கள் பல்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பது பிரச்னையல்ல. ஒவ்வொருவரும் ஒரு தனித்தனிப் பிரிவாக வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்," என அவர் விளக்கினார்.

"ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாமல் சகிப்புத் தன்மை குறையும் போது, இந்நாட்டில் குழப்பம் மேலோங்குகிறது என்பதால் அது அழிவில் முடிகிறது," என்றார்.



### மோசமான காலத்தில் இஸ்ரேல்

கெரெட்டின் புனைக்கதை ஒன்றில் வரும் வாடகை கார் ஓட்டும் நபர், "தற்போது பாலத்தீனர்களுடனான மோதல்கள், உள்நாட்டு போராட்டங்கள் என ஒவ்வொரு நாளும் பிரச்னைகளை எதிர்கொள்ளும் நிலையில், இஸ்ரேல் போரில் ஈடுபட்டிருந்த காலம் நன்றாக இருந்தது. அதை நினைத்து நான் ஏங்குகிறேன். அந்த காலம் கூட இவ்வளவு மோசமாக இல்லை," என்றும் கூறுகிறார்.

"எகிப்து, சிரியா, ஜோர்டான், லெபனான் போன்ற எதிரி நாடுகள் என் நாட்டை சூழ்ந்திருந்த காலத்தில் நான் வளர்ந்தேன். எல்லா திசைகளில் இருந்தும் அவர்கள் எங்களை மிரட்டிக்கொண்டிருந்தது மட்டும் இன்றி தாக்குதலும் நடத்தினர்," என தமது பழைய நினைவுகளை எழுத்தாளர் கெரெட் அசைபோட்டார்.

"ஆனால் தற்போது இஸ்ரேல் நாட்டை பாருங்கள்.. மத்திய கிழக்கில் அது ஒரு வலிமையான நாடாக இருக்கிறது. ஆனால் எப்போது பார்த்தாலும் கத்தியுடனும், மோசமான துப்பாக்கிகளுடனும் வரும் பாலத்தீனர்களை எதிர்கொள்ளும் நிலையில் நாங்கள் உள்ளோம்."

மேலும், "ஒரு காலத்தில் நாங்கள் தாவீதாக இருந்தோம். ஆனால் தற்போது கோலியாத்தாக இருக்கிறோம்," என்றார்.



2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு நேர்காணலின் போது, "தமது மகன் லெவ், ஒரு பாலத்தீனரை கூட எப்போதும் பார்த்ததில்லை" என கெரெட் குறிப்பிட்டிருந்தார். மேலும், தமது இளமைப்பருவத்தின் போது பாலத்தீன அரபு மக்களிடம் நெருங்கிய தொடர்பு இருந்ததை நினைவுகூர்ந்த கெரெட், 1990களில் இஸ்ரேல் மற்றும் பாலத்தீன விடுதலை அமைப்பினருக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கைக்குப் பின் அனைத்தும் மாறிவிட்டதாகத் தெரிவித்தார்.

"நான் சிறுவனாக இருந்த போது எங்களுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையே எந்த பிரிவினையும் கிடையாது. அதனால் அவர்கள் எப்போதும் இங்கே இருப்பார்கள். நாங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தோம். அது மிகவும் இயல்பாகவே இருந்தது. ஆனால் இப்போது இருதரப்பும் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. அது இஸ்ரேல் நாட்டுக்கு வேலைக்கு வரும் பாலத்தீனர்களுக்குக் கூட பாதிப்பை ஏற்படுத்துகிறது," என்றார்.

'ஆனால் ஒஸ்லோ உடன்படிக்கை இஸ்ரேலியர்களுக்கும், பாலத்தீனர்களுக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்தி இருதரப்பையும் சந்திக்கவிடாமல் செய்துவிட்டது."

சமூக வலைதளங்கள் இப்பிரச்னையை மேலும் மோசமாக்குவதாக கெரெட் நம்புகிறார்.

"பேஸ்புக் யுகத்தில், ஒரு சாதாரண இஸ்ரேலியர் பாலத்தீனர்களை நினைத்து கடும் அச்சத்துடனேயே



வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சாதாரண பாலத்தீனர் இஸ்ரேலியர்களுக்கு எதிராக கடும் வெறுப்புடன் இருப்பதாகவும் நான் கருதுகிறேன்."

### "முரண்" நகரங்கள்

கெரெட்டின் கூற்றின்படி, 'எதிரிகளால் நிரம்பிய அண்டை நாட்டுக்கு மத்தியில்" வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்ற ஒரே ஒரு நடைமுறை உண்மை இஸ்ரேலியர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கிறது.

"நாங்கள் யாரும் தோற்றுவிட்டு உயிரிழக்க விரும்பவில்லை. ஈரானியர்களின் குண்டுவீச்சுக்கு இலக்காகவும் நாங்கள் யாரும் விரும்பவில்லை."

"எங்களுடைய தற்போதைய அரசு ஒரு தீவிர வலதுசாரியாக இருக்கிறது. மிகவும் முரட்டுத் தனமாக அது ஒவ்வொருவரையும் அடிமைப்படுத்த முயல்கிறது. ஆனால் அவர்களுக்கு வாக்களித்த பெரும்பாலானவர்கள் பழமைவாத யூதர்கள். அந்த யூதர்களுக்கு கட்டாய ராணுவப் பணி உள்ளிட்ட விஷயங்களில் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன," என அவர் விளக்கினார்.

"பழமைவாத யூதர்களின் ஆதரவுடன் செயல்படும் ஆட்சியாளர்கள் மிகவும் முரட்டுத் தனமாக இருக்கிறார்கள். நானும், எனது மகனும் அவர்களுக்காக சண்டையிட வேண்டும் என நினைக்கின்றனர்."

2022-ம் ஆண்டு வெளியான நிதித்துறை அறிக்கையை மேற்கோள் காட்டிய அவர், பழமைவாத யூதர்களைவிட மதசார்பற்ற இஸ்ரேலியர்கள் 6 மடங்கு அதிகமான வரி செலுத்துவதை சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இஸ்ரேலின் எதிர்காலம் எப்படி இருக்கும்? நிதி சார்ந்த தலைநகராகத் திகழும் டெல் அவிவ் நகரத்தைப் போலவா அல்லது பெனி ப்ராக் போலவா?

"ஒரு வெள்ளிக்கிழமை மாலை நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளை இஸ்ரேலியர்கள் காணும் நிலை டெல் அவிவ் நகரில் இருக்கிறது. ஆனால், வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை இரவும் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என மதச்சட்டங்களை அதிகம் சார்ந்திருக்கும் யூதர்கள் வாழும் நகரமாக பெனி ப்ராக் இருக்கிறது. எனது அச்சம் என்னவென்றால், இரு சார்பு நிலைகளைச் சார்ந்த பொதுமக்களில் ஏதோ ஒரு சார்பு நிலையைச் சார்ந்தவர்கள் எதிர்காலத்தில் ஒடுக்கப்படுவார்கள். அது தான் எனக்குள் பயத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது," என்று தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

# இலங்கை உள்நாட்டுப் போர்:

## இரசாயன குண்டுத் தாக்குதலில் கருகி வீழ்ந்த மக்கள்: முன்னாள் போராளியின் தகவலும் இராணுவத்தின் பதிலும்

ரஞ்சன் அருண் பிரசாத்

“எரி குண்டு என சொல்லப்படும் பாஸ்பரஸ் குண்டை (ரசாயன குண்டு) அடித்து எல்லா சனங்களும் (மக்களும்) கருகினார்கள். ஒரு மரம் கருகி, எப்படி கரி கட்டையாக விழுமோ, அப்படி தான் சனம் (மக்கள்) எல்லாம் இருந்தது. தொட்டால் கரி தான். ஒரு பயங்கரமான குண்டுத் தாக்குதலை தான் கடைசி கட்டத்தில் நடத்தி, எங்கள் மக்களை அழித்தது ராணுவம்” என கூறுகின்றார் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் பாபு கஜேந்தினி.

இலங்கை ராணுவத்தினால் நடத்தப்பட்டதாக கூறப்படும் ரசாயன குண்டுத் தாக்குதலில் நேரடியாக பாதிக்கப்பட்டு, தனது உடலில் காயங்களோடு வாழ்ந்து வரும் ஒரு முன்னாள் பெண் போராளி.

போராட்ட வாழ்க்கையிலிருந்து வெளியேறி, இன்று தனது குடும்பத்துடன் பாபு கஜேந்தினி வவுனியாவில் வாழ்ந்து வருகின்றார்.

தற்போது விவசாயத்தில் ஈடுபட்டு வரும் தனக்கு தனது கணவர் முழுமையாக ஆதரவை வழங்கி வருவதாக கூறுகிறார்.

இந்த தம்பதியினருக்கு கல்வி கற்கும் வயதில் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இலங்கை தமிழர்கள் மத்தியில் மே 18, ஒரு துக்க தினமாகும்.

2009ம் ஆண்டு மே மாதம் 18ம் தேதி மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடந்த போராட்டம் முடிவுக்கு வந்தது.

அந்த நாளை ஈழத் தமிழர்கள் இன்றும் துக்கத் தினமாக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

இவ்வாறு இறுதிக் கட்ட யுத்தத்தில் நடந்த அனுபவங்களை தேடி இலங்கையின் வடப் பகுதிக்கு சென்றபோது, பாபு கஜேந்தினி என்ற முன்னாள் போராளியை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

புலிகள் அமைப்பில் இறுதியாக கணினி பிரிவில் பாபு கஜேந்தினி பணியாற்றியுள்ளார்.

சண்டைகளின் போது, காயங்களுக்குள்ளாகும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு சிகிச்சைகளை அளித்து, அவர்களின் உயிரை காக்கும் பணியை பாபு கஜேந்தினி செய்துள்ளார்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட இறுதி தருணம் வரை, முள்ளிவாய்க்கால் பகுதியில் இவர் இருந்துள்ளார்.

2009ம் ஆண்டு மே மாதம் யுத்தம், உக்கிரமடைந்திருந்தது.

இதன்போது, இலங்கை ராணுவத்தினால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாபு கஜேந்தினி கடும் காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

இவரது கை, கால், உடல் என உடம்பின் பல பகுதிகளில் தீ காயங்கள் காணப்படுகின்றன.

இலங்கை ராணுவத்தினால் நடத்தப்பட்டதாக கூறப்படும் ரசாயன குண்டுத் தாக்குதலிலேயே தான் இவ்வாறான காயங்களுக்கு உள்ளாகியதாக பாபு கஜேந்தினி தெரிவித்தார்.

“மறக்க முடியாத அனுபவம் என்று சொல்ல போனால், முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் தான். இறுதி யுத்தம் வரை நான் அவர்களோடு தான் இருந்தேன். நாங்கள் இருக்கும் இடத்தில் போராளிகளும் சரி, பொதுமக்களும் சரி கும்பலாக தான் இருப்போம். பங்கர் என்று சொன்னால், அந்த பங்கருக்குள் ஆட்களை விட்டு விட்டு, சின்னவர்களை உள்ளே விட்டு விட்டு, நாங்கள் பெரியவர்கள் வெளியில் நிற்போம். அந்த இடத்தில் எரிகணை வீச்சுக்கள் வந்தால், அந்த இடத்தில் அவ்வளவு பேரும் சிதறி போவோம்.



அப்படியாக இறுதி யுத்தத்தின்போது ஐந்தாம் மாதம் 10ம் தேதி பங்கருக்குள் எல்லாரையும் விட்டு விட்டு, நான் ஓரமாக இருந்தேன். உள்ளே போவதற்கு இடமில்லை. எரி குண்டு என சொல்லப்படும் பாஸ்பரஸ் குண்டை (ரசாயன குண்டு) அடித்து எல்லா சனங்களும் (மக்களும்) கருகினார்கள். ஒரு மரம் கருகி, எப்படி கரி கட்டையாக விழுமோ, அப்படி தான் சனம் எல்லாம் இருந்தது. தொட்டால் கரி தான். ஒரு பயங்கரமான குண்டுத் தாக்குதலை தான் கடைசி கட்டத்தில் நடத்தி, எங்கள் மக்களை அழித்தது ராணுவம். அந்த இடத்தில் எனக்கு நேரடியாக தாக்கம் இல்லை. அந்த வெப்பம் அடித்தது தான் எனக்கு ஒரு பக்கம் இப்படி இருக்கின்றது. எனது உடம்பு இப்படி தான் வெள்ளையாக இருக்கின்றது.” என்கிறார் பாபு கஜேந்தினி.

இறுதிக் கட்டம் யுத்தம் இடம்பெற்ற தருணத்தில், அந்த பிரதேசத்தில் காணப்பட்ட நீர் நிலைகள் அனைத்தும் ரத்தமாகவே தெரிந்தது எனவும் அவர் கூறுகின்றார்.

“நாங்கள் வட்டுவாலுக்கு வந்து, தண்ணீரை பார்க்கின்றோமா? இரத்தத்தை பார்க்கின்றோமா என்ற நிலை தெரியாமல் இருந்தது. முழுக்க அப்படியே ரத்த வெள்ளம். தண்ணியா, ரத்தமா என்று தெரியாது. ரத்தமும் சதையுமாக தான் மக்கள் அதற்குள் கிடந்தனர். அதற்குள் தான் நாங்கள் இறங்கி வந்தோம்.”

யுத்தம் மௌனிக்கப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர், கடும் காயங்களுடன் பாபு கஜேந்தினி ராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராணுவம் இருந்ததை அறியாது, பொதுமக்களுடன் இணைந்து வருகைத் தந்த சந்தர்ப்பத்திலேயே தான் கைது செய்யப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

பொதுமக்களை போன்று வருகைத் தந்த தன்னை, பொதுமக்களே காட்டிக் கொடுத்ததாகவும், அதனாலேயே தானும் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பம் உங்களுக்கு எப்படி இருந்தது என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

“ஆரம்பத்தில் அது பாஸ்பரஸ் குண்டு (ரசாயன குண்டு) என்று எங்களுக்கு தெரியாது. கிபீர் தாக்குதல் நடப்படும். அந்த



சந்தர்ப்பத்தில் அருகிலுள்ளவர்கள் காயப்படுவார்கள். தாக்கம் என்பது குறைவு. காயங்கள் கூடுதலாக இருக்குமே தவிர, உயிரிழப்புக்கள் குறைவாக இருக்கும். அப்படி நினைத்துக்கொண்டு தான் இருந்தோம். திடீரென பாஸ்பரஸ் குண்டுகளை போட்டு மக்கள் கருகியதும், எங்களால் என்னவென்று ஊகிக்க முடியாத நிலைமையில் தான் அங்கு இருந்தோம். பிறகு தான் தெரியும் அது பாஸ்பரஸ் குண்டு என்று. முதல் தெரியாது எங்களுக்கு” என அவர் பதிலளித்தார்.

### ராணுவத்தின் பதில்

இறுதிக் கட்ட போரின் போது, ரசாயன குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக பல்வேறு சந்தர்ப்பங்களில், இலங்கை ராணுவத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையில், போர் முடிவடைந்து 14 வருடங்களின் பின்னர் முன்னாள் போராளி ஒருவர் அதே குற்றச்சாட்டை மீண்டும் முன்வைக்கின்றார். இலங்கை ராணுவத்தின் பாஸ்பரஸ் குண்டு தாக்குதல் காரணமாக, தான் உள்ளிட்ட பலர் பாதிக்கப்பட்டதாக அவர் குற்றம் சுமத்துகின்றார்.



இந்த விடயம் தொடர்பில், இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்திடம் வினவியபோது:

இலங்கை ராணுவம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரசாயன குண்டுத் தாக்குதல்களை நடத்தவில்லை என அவர் பதிலளித்தார்.

“ராணுவம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரசாயன குண்டுத் தாக்குதல்களை நடத்தவில்லை. அவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றால், அதனை கொள்வனவு செய்வதற்கு ஒரு இடம் இருந்திருக்க வேண்டும் அல்லவா? கொள்வனவு செய்ய முடியாது. இலங்கையில் எந்தவொரு ஆயுதமும் தயாரிக்கப்படாது. இன்றும் வெளிநாடுகளிடமிருந்தே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யும் போது, ரசாயன குண்டுகளை எவ்வாறு அவர்கள் தருவார்கள்? அவர்கள் அதனை தர மாட்டார்கள். எந்தவொரு நாடும் எமக்கு ரசாயன ஆயுதங்களை வழங்காது என்பதை முன்னிலைப்படுத்தியே, அந்த குற்றச்சாட்டை நிராகரிக்க எம்மால் முடியும்.” என இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவிக்கின்றார்.

(பிபிசி)

# உணர்வுபூர்வமாக நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



















# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வாய்ச் சுகாதார பிரிவு ஆரம்பிப்பு

அக்கரைப்பற்று, மே 19

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மருத்துவ மையத்தில் 'வாய்வழி சுகாதாரப் பிரிவு' (பல் மருத்துவப் பிரிவு) நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.**




இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல்.எம். றிபாஸ், பிரதி பணிப்பாளர் எம்.பீ.ஏ வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹிர், கல்முனை பிராந்திய வாய்ச்சுகாதார நிபுணர் எம்.எச்.எம் சரூக், ஏனைய பிரிவுத் தலைவர்களும் தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சார்பில் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர், பதிவாளர் மற்றும் பீடாதிபதிகள் விரிவுரையாளர்கள் மாணவர் பேரவையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இணைந்து பல்வேறு செயறிட்டங்கள் கருத்திட்டங்களை அமுல்ப்படுத்தி வருகின்றன.

இதற்கமைவாக கடந்த ஆறு மாத காலமாக பேசப்பட்டு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வாய்ச் சுகாதார பிரிவினால் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வாய் சுகாதார மேம்பாட்டுப்பிரிவு நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது டன் எதிர்காலத்தில் பணிமனையின் பிரிவுகளினால் மாணவர்கள் மற்றும் கல்விச்சமூகத்திற்கான விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்வதென்ற இரு தரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு பயன்படுத்தாமல் இருந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பெரும் சிரமத்திற்கு மத்தியில் திருத்தி மீளமைத்து குறித்த வாய்ச் சுகாதாரப்பிரிவினை ஆரம்பித்ததன் மூலம் மாணவர்கள் தேவையற்ற விடுமுறைகளை எடுத்து வெளியில் சென்று மருத்துவங்களை பெறுவது தவிர்க்கப்பட்டிருப்பதுடன் பயணச்செலவுகளும் தவிர்க்கப்பட்டுள்ளது என கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனை செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# காரைதீவு விபுலானந்தாவின் பவளவிழா இரத்ததான முகாம்

காரைதீவு, மே 19

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு பவளவிழாவினை சிறப்பிக்கும் வகையில் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றியம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை இரத்தவங்கி பிரிவுடன் இணைந்து நடத்திய "உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" இரத்ததான நிகழ்வானது வெகு சிறப்பாக இடம்பெற்றது.

வைத்தியசாலைகளில் தற்போது நிலவும் குருதித் தேவைப்பாட்டினை அறிந்து குருதிக் கொடையாளர்கள் வருகை தந்து சிறப்புற ஒத்துழைப்பை வழங்கினர்.

இந்த இரத்ததான நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை சமூகம், பொது மக்கள், பொது அமைப்புக்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் பங்கேற்றனர். (அ)

# கல்முனை பிரதேச செயலகத்தின் பொது மக்கள் நடமாடும் சேவை

அக்கரைப்பற்று, மே 19

கல்முனை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது மக்கள் நடமாடும் சேவை நேற்று முன் தினம் புதன்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் இடம் பெற்றது.




இந்நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள், சமூர்த்தி, மோட்டார் போக்குவரத்து, திட்டமிடல், கலாசாரம், மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை, பொலிஸ், தேசிய வீடமைப்பு அதிகார சபை, பதிவாளர் திணைக்களம் ஆகிய பிரிவுகள் கலந்துகொண்டு பொது மக்களின் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் முதியோர் அடையாள அட்டைகளும் சிலருக்கு வழங்கப்பட்டதுடன் அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு சக்கர நாற்காலியும், இயலாமை நிலையிலுள்ள முதியோர்களுக்கு ஊன்றுகோலும் வழங்கப்பட்டன. அத்துடன் மருதமுனை வீட்டுத் திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இதில் கல்முனை பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு தங்களது தீர்க்கப்படாத நீண்ட காலப் பிரச்னைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யூ.எல் ஜவாஹிர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், கல்முனை, பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலீஹ், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எச் ஜனூபா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உடல்திறனாய்வுப் போட்டி



மட்டக்களப்பு, மே 19

போரதீவுப்பற்றுக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடல்திறனாய்வுப் போட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராசா தலைமையில் கோவில்போரதீவு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பட்டிருப்பு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனுசியா- ராஜசேகர் பிரதம விருந்தினராகக் கலந்து உடல் திறனாய்வுப் போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

இப் போட்டி நிகழ்வுகளில் உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.நேசகஜேந்திரன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# விசேட தேவையுடையோருக்கான ஆளுமை விருத்தி பயிற்சி நிகழ்வு

அக்கரைப்பற்று, மே 19

விசேட தேவையுடையோருக்கான ஆளுமை விருத்தி பயிற்சி நெறி நிகழ்வு நேற்று முன் தினம் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுயதொழில் ஊக்குவித்தல் மற்றும் தனியார் துறையில் வேலைக்கு அமர்த்தல் தொடர்பான அனுபவப் பகிர்வு உள்ளிட்டவைகள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி வழிகாட்டலில் கல்முனை பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜவ்பர் தலைமையில் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஜீவரூபன், திறனாய்வு உத்தியோகத்தர் எம்.வை. எம்.றிபாது மற்றும் வளவாளர்களாக மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் திருக்கோவில் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.கங்காதரன், நியாஸ்தீன், அம்பாறை மாவட்ட தொழில் நிலையத்தின் அலுவலர் புவிதா ஆகியோர் கலந்துகொண்டனர்.



கல்முனை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விசேட தேவையுடைய பயனாளிகள் பங்கேற்றனர். (அ)

# அமெரிக்க 'பேட்ரியாட்' வான் பாதுகாப்பு கவசம் ரஷ்யாவின் தாக்குதலால் சேதம்!

## உக்ரைன் தலைநகர் மீது ஏவுகணை வீச்சு தீவிரம்!!

மொஸ்கோ, மே 19

**ரஷ்யா கடந்த சில நாட்களாக உக்ரைன் தலைநகரான கீவ் மீது ஏவுகணைத் தாக்குதல்களைத் தீவிரமாக்கியுள்ளது.**

**இவ்வாறான தாக்குதல்களில் இருந்து நகரைப் பாதுகாத்துவருகின்ற அமெரிக்காவின் வான் பாதுகாப்பு ஏவுகணைக் கவசம் ஒன்று ரஷ்யாவின் தாக்குதலினால் சேதமடைந்துள்ளது. அமெரிக்க மற்றும் உக்ரைன் பாதுகாப்பு அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். அதேசமயம் வான் பாதுகாப்புக் கவசத்தை முற்றாக அழித்து விட்டதாக மொஸ்கோ உரிமை கோரியுள்ளது.**

"பேட்ரியாட் வான் பாதுகாப்பு ஏவுகணைக் கவசம்" அமெரிக்காவிடம் உள்ள ஆகப் பிந்திய நவீன வான் பாதுகாப்பு ஆயுதம் ஆகும். அது ஜெனரேட்டர்கள், ஒரு ரடார் பிரிவு, கட்டுப்பாட்டு மையம், அன்டெனாக்கள், ஒரு லோஞ்சர் நிலையம் மற்றும் இடைமறிக்கும் ஏவுகணைகள் ஆகிய பல தொகுதிகளை உள்ளடக்கியது. பேட்ரியாட் ஏவுகணையை ஏவுவதற்கும் அதன் இலக்கை வெற்றிகரமாக வழிநடத்துவதற்கும் இந்தத் தொகுதிகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து செயற்படுகின்றன.

கீவ் நகரின் முக்கிய இடங்களைத் தாக்குவதற்காக ரஷ்யா செலுத்துகின்ற ஏவுகணைகளில் கிட்டத்தட்ட முழுவதையும் இந்த நவீன வான் பாதுகாப்புக் கவசமே தடுத்து அழித்து வருகின்றது. தினமும் நகரில் கேட்கின்ற பெரும் வெடி ஓசைகள் எதிரி ஏவுகணைகளை வானத்தில் வைத்தே அழிக்கின்ற பேட்ரியாட் ஏவுகணைகளது வெடிப்புச் சத்தங்களே ஆகும்.

ரஷ்யப் படையினரின் அதி நவீன ஹைப்பர்சோனிக் கின்சல் ஏவுகணைத் தாக்குதல் காரணமாகவே அமெரிக்க வான் கவச அமைப்பு சேதமடைந்துள்ளது என்று கூறப்படுகிறது. உக்ரைனில் வைத்தே அதனைத் திருத்துவதற்கு அந்நாட்டுப் படையினருக்கு அமெரிக்க நிபுணர்கள் உதவுவர் என்று தெரியவருகிறது.

"கருவிகளுக்குச் சிறிய சேதங்களே ஏற்பட்டுள்ளன. அது முற்றாக அழிக்கப்படவில்லை. இன்னமும் இயங்கும் நிலையிலேயே இருக்கிறது" என்று வோஷிங்டனில் பென்டகன் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# தங்க சுரங்கம் இடிந்து விபத்து; 7 பேர் மரணம்



அக்ரா, மே 19

மேற்கு ஆபிரிக்க நாடான கானாவின் கிழக்கே அமைந்துள்ள சின்குவா பகுதியில் உள்ள தங்கசுரங்கத்தில் தொழிலாளர்கள் சிலர் தங்கம் வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக அந்த பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால் தங்கசுரங்கம் இடிந்து விழுந்தது. இதில் அங்கு சுரங்க வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த பொலிஸார் மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் சுரங்க தொழிலாளர்கள் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் படுகாயமடைந்த 3 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# கர்நாடகா முதலமைச்சராக சித்தாராமையா தெரிவானார்



புதுடில்லி, மே 19

கர்நாடகாவில் முதலமைச்சர் பதவி குறித்த சர்ச்சைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாநிலத்தில் அண்மையில் சட்ட பேரவை தேர்தல் இடம்பெற்றிருந்தது.

இந்த தேர்தலில், 223 இடங்களில் 135 இடங்களை காங்கிரஸ் கட்சி கைப்பற்றி தனிப்பெரும்பான்மையை பெற்றுள்ளது.

இதனிடையே, அங்கு முதலமைச்சர் தெரிவில், சித்தாராமையா மற்றும் டி.கே சிவகுமாருக்கு இடையே கடுமையான போட்டி நிலவியது.

அதன்பின்னர் நேற்று முன்தினம் குறித்த இருவரிடமும் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி தனித்தனியே கலந்துரையாடினார்.

இதனடிப்படையில் முதலமைச்சராக சித்தாராமையா தெரிவு செய்யப்பட்டதுடன், துணை முதல்வராக டி.கே சிவக்குமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

பதவியேற்பு நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பின்லாந்து தூதரக வங்கிக்கணக்குகளை ரஷ்யா முடக்கியமை உறுதியாகியுள்ளது

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

ஹெல்சிங்கி, மே 19

மொஸ்கோவில் உள்ள தூதரகம் மற்றும் செயிண்ட் பீற்றர்ஸ்பேர்க்கில் உள்ள தூதரகத்தின் வங்கிக் கணக்குகளை ஏப்ரல் பிற்பகுதியில் ரஷ்யா முடக்கியதாக பின்லாந்தின் வெளியுறவு அமைச்சர் பெக்கா ஹாவிஸ்டோ உறுதிபடுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

ரஷ்யாவில் உள்ள நிறைவுபெற்ற பணிகளின் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. தற்போது அவற்றைப் பயன்படுத்த முடியாது. இந்தப் பிரச்னையில் ரஷ்யாவுக்கு ஒரு குறிப்பு அனுப்பப்பட்டது. கணக்குகள் முடக்கப்பட்டதற்கான காரணம் குறித்து ரஷ்யா இன்னும் அதிகாரபூர்வ விளக்கத்தை அளிக்கவில்லை.

மேலும், பின்லாந்தில் ரஷ்ய தூதரகப் பணிகளின் கணக்குகளை பின்லாந்து முடக்கவில்லை. எனவே, ரஷ்யாவிற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இது ஒருவித எதிர்வினை என்று கூற முடியாது.

ஆனால், "இதற்குக் காரணம், நிதி பரிவர்த்தனைகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடைகள், மேற்கில் உள்ள ரஷ்யப் பணிகளுக்கு தலைவலியை ஏற்படுத்தியிருக்கலாம். ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ரஷ்யாவில் பணம் செலுத்தும் பரிவர்த்தனைகளில் இதே போன்ற சிக்கல்களை சந்தித்துள்ளன.



ஆனால் இந்த நிலைமை நீண்ட காலத்திற்கு தொடர்ந்தால், புதிய தீர்வுகளைக் கண்டறிய வேண்டிய அவசியத்தை கொண்டு வரலாம் என்பது தெளிவாகிறது-என்றார். (அ)

# ஈக்குவடோர் ஜனாதிபதியால் கலைக்கப்பட்ட பாராளுமன்று



குயிட்டோ, மே 19

எதிர்க்கட்சியினர் பெரும்பான்மையாகவிருந்த ஈக்குவடோர் பாராளுமன்றம் அந்நாட்டு ஜனாதிபதியால் கலைக்கப்பட்டுள்ளது.

குற்றப்பிரேரணையொன்றின் மீதான வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

நிதியமொன்றிலிருந்து முறைகேடாக பணம் கையாளப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் கண்மூடித்தனமாக இருப்பதாக ஈக்குவடோர் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படவிருந்தது.

இந்தநிலையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் வரை 6 மாதங்களுக்கு எந்த இடையூறுமின்றி அவர் பதவியில் நீடிக்கலாமென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ரஷ்ய விஞ்ஞானிகள் மீது அரச துரோக குற்றச்சாட்டு

மொஸ்கோ, மே 19

ரஷ்யாவின் முன்னணி விஞ்ஞானிகள் மூன்று பேருக்கு எதிராக அரச தூரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விஞ்ஞானிகள் ரஷ்யாவின் ஹைப்பர்சொனிக் ஏவுகணை தொழிற்நுட்பத்தை முன்னேற்றும் வேலைத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்.

இவர்களுக்கு எதிராக அரச துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக ரஷ்ய விஞ்ஞானிகள் மத்தியில் குழப்பத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கிரம்ளின் மாளிகையின் பேச்சாளர் திமிடிரி பேஸ்கோப், தமது சகாக்களுக்காக சைபீரிய விஞ்ஞானிகள் அனுப்பியுள்ள கடிதம் சம்பந்தமாக தாம் அறிந்துள்ளதாகவும் எனினும் இது பாதுகாப்பு சேவை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை எனவும் கூறியுள்ளார்.



எது எப்படி இருந்த போதிலும் தமது சகாக்கள் கைது செய்யப்பட்டமை ரஷ்ய அறிவியல் துறைக்கு மிகப் பெரிய பாதிப்பு என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (அ)

# இலங்கை றக்பிக்கு சர்வதேச தடை

சர்வதேச றக்பி சம்மேளனம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இலங்கை றக்பிக்கு சர்வதேச தடை விதித்துள்ளது.

இலங்கையில் றக்பி விளையாட்டுக்கு அரசியல் அழுத்தம் காரணமாக சர்வதேச றக்பி விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து சர்வதேச றக்பி சம்மேளனம் இந்த தடையை விதித்துள்ளது.

இதற்கு முன்னர் ஆசிய றக்பி சம்மேளனத்தினாலும் இலங்கை றக்பி விளையாட்டுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

குறித்த தடை காலப்பகுதியில் இலங்கை ரக்பி வீரர்கள், சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும்போது பல்வேறு கட்டுப்பாடுகளை கடைபிடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இந்நிலையில், இலங்கையில் கால்பந்தாட்டத்துக்கும் பீபா சர்வதேச தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரெஞ்சு தொடரை தவறவிடும் நடால்?

பிரெஞ்சு ஓபன் ரென்னிஸ் நடப்பு சம்பியனான ரபேல் நடால், காயம் காரணமாக இம்முறை தொடரில் விளையாடமல் விடக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

இம்முறை அவர் பிரெஞ்ச் ஓபனை தவற விட்டால், கடந்த 19 ஆண்டுகளில் முதல் முறையாக பிரெஞ்ச் ஓபனில் விளையாடமல் விடும் முதலாவது சந்தர்ப்பமாக அமையும்.

நடால் அடுத்த மாதம் தனது 37ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். களி மண் தரை போட்டிகளில் 14 ஒற்றையர் சாம்பியன்ஷிப்களை வென்று சாதனை படைத்துள்ள நடால், களி மண் தரை ரென்னிஸின் மன்னர் என வர்ணிக்கப்படுகிறார்.

அவுஸ்திரேலிய ஓபன் இரண்டாவது சுற்றில் அமெரிக்க வீரரான மெக்கென்சி மெக்டொனால்டிடம் தோல்வியடைந்த பின்னர் அவர் டென்னிஸ் போட்டிகளில் விளையாடவில்லை.

22 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான அவரது இடுப்பு பகுதி மூட்டு நெகிழ்வால் தசைக்கிழிவினால் அவதிப்படுகிறார்.

அவுஸ்திரேலிய ஓபனில் இருந்து அவர் வெளியேறிய போது, ஆறு முதல் எட்டு வாரங்கள் மட்டுமே ஓய்விலிருக்கவேண்டுமென முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிரச்னை விரைவில் குணமடையவில்லை.

டுபாய், இந்தியன் வெல்ஸ், மியாமி, மான்டே கார்லோ, பார்சிலோனா, மட்ரிட் மற்றும் இந்த வாரம் ரோமில் நடந்த இத்தாலிய ஓபன் ஆகிய இடங்களில் நடந்த முக்கிய போட்டிகளை நடால் தவறவிட்டார்.

ஸ்பெயினில் உள்ள அவரது ரபா நடால் அக்கடமியில் இன்று ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தவுள்ளார். அங்கு அவர் பிரெஞ்ச் ஓபனில் விளையாட முடியாதது குறித்து அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரெஞ்ச் ஓபன் மே 29 திங்கள் அன்று தொடங்க உள்ளது.

நடால் 2004 ஆம் ஆண்டு இடது கணுக்காலில் ஏற்பட்ட முறிவு காரணமாக பிரெஞ்ச் ஓபனை தவறவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# டெல்லி அபார வெற்றி

## மூடை கட்டியது பஞ்சாப்

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான நேற்று முன்தினம் ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

தரம்சாலா நடைபெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி பீல்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கப்பிட்டல்ஸ் 20 ஓவர்களில் 2 விக்கெட் மட்டுமே இழந்து 213 ஓட்டங்கள் குவித்தது.

இந்த சீசனில் எப்போதும் இல்லாத வகையில் இந்தப் போட்டியில் கப்டன் டேவிட் வோர்னர்-ப்ரிதிவி ஷா கூட்டணி அதிரடியாக ஆடியது. வோர்னர் 31 பந்துகளில் 46 ஓட்டங்களும், ப்ரிதிவி ஷா 38 பந்துகளில் 54 ஓட்டங்களும் விளாசி வலுவான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

அதை அடுத்தக் கட்டத்துக்கு கொண்டு சென்றார் ரூசோ. பஞ்சாப் பந்துவீச்சை பந்துகளை பவண்டரி, சிக்சர்களாக பறக்கவிட்ட அவரால் டெல்லியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. கடைசி வரை களத்தில் நின்ற ரூசோ, 37 பந்துகளில் 6 பவுண்டரி 6 சிக்சர்களுடன் 82 ரன்கள் குவித்தார். அவருக்கு பக்கபலமாக பில் சால்ட் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன்பின் 214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்குகிய பஞ்சாப் அணிக்கு ஷிகர் தவான் தான் சந்தித்த முதல் பந்திலேயே அவுட் ஆகி அதிர்ச்சி அளித்தார். கடந்த போட்டியில் செஞ்சரி விளாசிய பிரப்சிம்ரன் சிங், இம்முறை 22 ரன்களோடு நடையைக் கட்டினார். எனினும், அதர்வா தைடே மற்றும் லிவிங்ஸ்டன் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதனால், பஞ்சாப் வெற்றியை நோக்கி நகர்ந்தது. அதர்வா தைடே, அரைசதம் கடந்து 55 ஓட்டங்கள் எடுத்த நிலையில் காயம் காரணமாக வெளியேற, லிவிங்ஸ்டன் மட்டும் அணியை காப்பாற்ற தனியாளாக போராடினார். அவருக்கு கைகொடுக்க மற்ற வீரர்கள் தவற, பஞ்சாப் அணி தோல்வி அடைந்தது. லிவிங்ஸ்டன் 94 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 198 ரன்கள் மட்டுமே பஞ்சாப் எடுத்தது.

இதன்மூலம் டெல்லி கப்பிட்டல்ஸ் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்த தோல்வியின் மூலம் பிளே ஓஃப் ரேஸில் இருந்து பஞ்சாப் வெளியேறியுள்ளது.

(அ)

# ஐ.சி.சி ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் அயர்லாந்தின் ஹாரி டெக்டர் புதிய உச்சம்!




23 வயதான அயர்லாந்து வீரர் ஹாரி டெக்டர், ஐ.சி.சி ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்துள்ளார். தற்போது 722 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் அவர் உள்ளார்.

இந்த தரவரிசையில் பாபர் அசாம் (பாகிஸ்தான்), ராசி வான் டெர் டுசென் (தென்னாபிரிக்கா), பகார் ஸமான் (பாக்.), இமாம்-உல்-ஹக் (பாக்.), சுப்மன் கில் (இந்தியா), டேவிட் வோர்னர் (ஆஸி.) ஆகியோர் முதல் 6 இடங்களில் உள்ளனர். கோலி 8வது இடத்தில் உள்ளார். டிகொக் மற்றும் ரோகித் சர்மா அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் டெக்டர் அபாரமாக விளையாடி இருந்தார். இந்த தொடரின் இரண்டாவது போட்டியில் 140 ஓட்டங்களை சேர்த்து அசத்தினார். அதோடு 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் 206 ஓட்டங்களுடன் அதிக ஓட்டம் எடுத்த வீரரானார். இதன் மூலம் ஐ.சி.சி ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் அவர் முன்னேற்றம் கண்டார்.

முக்கியமாக அயர்லாந்து ஆடவர் கிரிக்கெட்டில் எந்தவொரு வீரரும் எட்டிடாத ஐ.சி.சி தரவரிசையை அவர் எட்டி சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 2021 ஜூனில் ஐசிசி தரவரிசையில் அயர்லாந்து அணி வீரர் போல் ஸ்டெர்லிங் 697 புள்ளிகளை பெற்றுள்ளார். அயர்லாந்தை சேர்ந்த இயன்மோர்கன், ஐசிசி தரவரிசையில் கடந்த 2019 இல் 712 புள்ளிகளை பெற்றுள்ளார். இருந்தாலும் அவர் இங்கிலாந்து அணிக்காக விளையாடி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த தரப்படுத்தலில் இலங்கை சார்பில் அசலங்கவே முன்னணியில் உள்ளார். அவர் 46ஆவது இடத்தில் உள்ளார்.

(அ)

# இளையோர் கேள்விகளுக்கு பதிலளிப்பது அரசியல்வாதிகள், அதிகாரிகளின் கடமை!

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 19

**முடங்கிப்போன பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தினால் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள இலக்குகளுக்கு மேலான இலக்குகளையும் குறுகிய காலத்தில் அடைந்துகொள்ள முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்குச் தள்ளப்பட்டமை மற்றும் தங்களது எதிர்காலம் தொடர்பில் இளையவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அரசியல்வாதிகள் தொடக்கம் அரசாங்க அதிகாரிகள் வரையில் அனைவரும் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி, சகலரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கடந்த கால தவறுகளை திருத்திக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் சில அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டியது அவசியமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மக்கள் பணம் வீணடிக்கப்படுவதை தவிர்க்க வேண்டுமெனில் அமைச்சரவை செயலாளர்கள் அமைச்சுகளுக்கு கீழுள்ள நிறுவனங்கள் பாதுகாப்பதற்கு மாறாக அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.



மாகாண சபைகளின் முதலீட்டுச் செலவுகள் மற்றும் மூலதனத் திட்டங்கள் தொடர்பில் புதிய சட்டதிட்டங்களை கொண்டுவர வேண்டியது அவசியமெனவும், கீழ் மட்டம் வரையில் அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் அடுத்த இரு வாரங்களுக்குள் தீர்மானம் எட்டப்படுமெனவும் ஜனாதிபதி கூறினார்.

வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டதோடு, அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு, அரச சேவை முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தில் வேலைத்திட்டம் தொடர்பிலான பரிந்துரைகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் 2023ஆம் ஆண்டுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட, கொள்கை ரீதியான மாற்றங்களுக்கு அவசியமான சட்டத் திருத்தங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சட்டத்திருத்தங்கள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டன. (அ)

# சமுத்திரன் எழுத்துகள் - நூல்கள் அறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மே 19

நோர்வேயில் வாழும் பேராசிரியர் என்.சண்முகரத்தினம் (சமுத்திரன்) எழுதிய இலங்கை மீள்சிந்திப்புக்கான சில முன்மொழிவுகள், சர்வதேச அரசியல் பொருளாதாரம், கலை இலக்கியம் சமூகம் அரசியல் -- ஒரு விமர்சனப்பார்வை, இலங்கை இனப்பிரச்னை; சிங்கள பெருந்தேசிய இனவாதத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும் என்ற நான்கு நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம், நவசமசமாஜ கட்சி உறுப்பினர் நடராஜா ஜனகன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் எஸ்.சிவகுருநாதன் ஆகியோர் உரையாற்றுவர்.

சமுத்திரனின் நான்கு நூல்களும் அண்மையில் நோர்வேயில் வெளியிட்டு வைக்கப்பட்டன. இவை லண்டன் சமூக இயல் பதிப்பகத்தின் வெளியீடுகளாகும். (அ)

# சட்டவிரோத குடியகல்வை தடுப்பதற்குத் தனிப் பிரிவு

கொழும்பு, மே 19

சட்டவிரோதமான குடியகல்வைத் தடுக்கும் வகையில் "பாதுகாப்பான குடியகல்வு ஊக்குவிப்புப் பிரிவை' மூன்று மாதங்கள் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தது.

இந்த விசேட குழு அதன் தலைவர் டாக்டர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் அண்மையில் கூடிய போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஓமானில் இடம்பெற்றதாக அறிக்கையிடப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பாய்வு செய்யும் நோக்கில் இக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரிவை அமைப்பதன் ஊடாக சுற்றுலா விசாவில் சென்று பின்னர் வேலைசெய்வதற்கான விசாவைப் பெற்று மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான செயற்பாடுகளைத் தடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய இந்த விசேட குழு, இப்பிரிவை முன்னோடித் திட்டமாக மூன்று மாதங்கள் நடைமுறைப்படுத்தி அது குறித்த அறிக்கையைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்டவை இணைந்து அங்கம் வகிக்கும் விசேட செயலணியின் ஊடாக இந்தப் பிரிவை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலா விசாவில் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் ஓமானில் தொழில் பெற்றுத் தருவதாக ஏமாற்றும் போலி முகவர்களிடமிருந்து அப்பாவித் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த ஆட்சேபனை இல்லா மைக்கான சான்றிதழ் முறைமையை மீண்டும் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வலியுறுத்தியது.

இது தொடர்பில் ஏற்கனவே ஓமான் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்பட்டிருப்பதாகவும், மீண்டும் இது பற்றிக் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சத்தியக் கடதாசி வழங்கும் முறையை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு, பாராளுமன்ற விசேட குழு ஆலோசனை வழங்கியது. (அ)

# பிராந்தியத் தேவைகளில் இணைந்து செயல்படும் நம்பிக்கை பிறந்துள்ளது

## ஆளுநர்களுக்கு ரிஷாத் எம்.பி வாழ்த்து

கொழும்பு, மே 19

பிராந்திய நலன்களிலும், பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் நோக்குகளிலும் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களை வாழ்த்தி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களான திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சிறுபான்மை சமூகங்களின் பூர்வீகத்திலுள்ளவர்கள். இதனால், எமது மக்களின் அபிலாஷைகள் பற்றி புதிதாக இவர்களுக்கு எதையும் சொல்ல வேண்டியதும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அன்றாட மற்றும் அடிப்படை பிரச்னைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றில், போரின் வடுக்களால் ஏற்பட்ட தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இடப்பெயர்வு, மீள்குடியமர்தல், காணிகளின் உரித்துக்களைப் பெறுதல், வாக்குரிமை மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு ஆகிய திட்டங்களில் ஆளுநர்களுடன் இணைந்து செயற்படலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது-என்றுள்ளது. (அ)

# சாதாரண தரப் பரீட்சை 29 ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, மே 19

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இம்மாதம் 29 இல் ஆரம்பமாகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 3,568 பரீட்சை நிலையங்களில் இம்முறை கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை நடைபெறுகிறது.

எதிர்வரும் மே 29 முதல் எதிர்வரும் ஜூன் 08 வரை பரீட்சைகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை ரீதியான பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணைகள் ஆகியன உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பட்டதாரிகளின் அனுமதியட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கும் கடந்த 15 ஆம் திகதி முதல் தபாலில் அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதே வேளை, அனுமதி அட்டைகள் கிடைக்காத பாடசாலை பரீட்சாத்திகள், அனுமதி அட்டைகளை பாடசாலை அதிபர்களிடமும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் தனிப்பட்ட முறையில் நேற்று தொடக்கம் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், **(www.doenets.lk)** அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# 225 கஞ்சா செடிகள் சிக்கின!

கொழும்பு, மே 19

கொஸ்லந்த பொலிஸ் பிரிவிலுள்ள பலஹருவ பிரதேசத்தில் கஞ்சாச் செடிகள் பயிரடப்பட்ட காணி ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு 6 அடி கொண்ட 225 கஞ்சாச் செடிகளை மீட்டு அழித்துள்ளனர் என கொஸ்லந்த பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை குறித்த பிரதேசத்திலுள்ள கஞ்சாச் செய்கை செய்யப்பட்ட காணியை முற்றுகையிட்டு அங்கு 6 அடி உயரம் கொண்ட 225 கஞ்சாச் செடிகளை பிடிங்கி அழித்ததுடன் அதில் ஒரு பகுதியை சட்ட நடவடிக்கைக்காக் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# வாகன விபத்தில் பெண் மரணம்!

கொழும்பு, மே 19

பேலியகொடை - புளுகஹ சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவியான இருவரும் பலத்த காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய கணவன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

## திருமலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு நீதிமன்று தடை!

திருமலை, மே 19

திருகோணமலை சிவன் கோவிலுக்கு அருகில், நடத்த திட்டமிடப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

திருகோணமலை தலைமையக பொலிஸார் தாக்கல் செய்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்தது.

அமைதி மற்றும் பொதுச் சுகாதாரத்தை சீர்குலைக்கும் வகையிலான எந்தவொரு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்வதற்கு எதிராக, இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடையுத்தரவில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 13 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

## நாட்டில் கோவிட் தொற்றால் 20 நாட்களில் 16 பேர் மரணம்

கொழும்பு, மே 19

கோவிட் தொற்று நோய் மீண்டும் தலைத்தூக்கி வருதுடன் கடந்த 20 நாட்களில் 16 கோவிட் நோயாளிகள் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 23,27 ஆம் திகதிகளில் இரண்டு மரணங்களும்,மே முதலாம் திகதி ஒரு மரணமும் 5 ஆம் திகதி மூன்று மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும் கடந்த 8,9,11,12,14 ஆம் திகதிகளில் ஏழு பேர் கோவிட் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர் எனவும் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு கூறியுள்ளது.

அதேவேளை, நாட்டில் டெங்கு நோய் பரவலும் அதிகரித்து வருகிறது.

மேல் மாகாணத்தில் 50 வீதமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)



## உயிர்நீத்த உறவுகளுக்கு நந்திக் கடலில் அஞ்சலி

முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் தலைமையில் நேற்று நந்திக்கடலில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நந்திக்கடலில் உயிர் நீத்த உறவுகளுக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்ம சாந்தி வேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அஞ்சலியின் பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினோம் -என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று தொகுதிக் கிளைச் செயலாளர் அ.ஜெ.பீற்றர் இளஞ்செழியன், கரைதுறைப்பற்று பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் இ. ஜெகதீஸ்வரன், தமிழரசுக்கட்சி மூலக்கிளைகளின் பிரதிநிதிகளான சிவகுமார்,ஜெறோம்சன், மிதுன் சமூக சேவகர் ஜொய்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)




# முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை நினைவு கூர்ந்த பிரிட்டன் எம்.பிக்கள்

லண்டன், மே 19

**ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகையில் ஒன்று கூடி இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.**

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுப் புத்தகத்தில் கையொப்பமிடுதல், காணொளி காட்சிப்படுத்தல் மற்றும் கண்காட்சி என்பன இடம்பெற்றன.

கன்சர்வேட்டிவ், லேபர், லிபரல் டெமோக்ராட்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் எம்.பி.க்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் ஒன்று கூடி உள்நாட்டுப் போரின்போது இலங்கை அரசின் தாக்குதலால் உயிரிழந்த அப்பாவி பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நினைவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டதன் மூலம், குற்றவாளிகள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும் மற்றும் நடந்த அட்டூழியங்களுக்கு நீதியை உறுதி செய்வதில் தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தினர். (அ)

## பதவி நீக்கினாலும் அஞ்சமாட்டேன் உண்மையை அம்பலப்படுத்துவேன்

### ஜனக ரத்நாயக்க விடாப்பிடி



கொழும்பு, மே 19

"என்னை பதவி நீக்கினாலும் வேறு ஏதேனும் ஒரு வழியில் வந்தாவது மக்களுக்கு உண்மையை தெளிவு படுத்துவேன்."-என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

"இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து என்னை நீக்குவதற்கான பிரேரணை எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. மக்கள் பக்கம் நின்றே நான் செயற்பட்டேன். உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்வெட்டை அமுலாக்க வேண்டாம் என வலியுறுத்தினேன். அதற்காக உயர்நீதிமன்றத்தையும் நாடினேன். அந்த நடவடிக்கை தவறு என ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்" எனவும் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

"என்னை இப்படியான செயற்பாடுமூலம் அச்சுறுத்த முடியாது. மக்களுக்காக அவர்கள் பக்கம் நின்று செயல்படும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர்களை காக்கவேண்டியது மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும். சிலவேளை அந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் அது வரலாற்று தவறாக அமைந்துவிடும். " எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## 13 மாதங்களின் பின் டொலர் பெறுமதி 300 ரூபாவுக்கும் குறைவாக சரிந்தது!

கொழும்பு, மே 19

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 299.21 ரூபாவாகவும், விற்பனை விலை 312.37 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலை 302.42 ரூபாவாகவும், விற்பனை விலை 316.18 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

நீண்ட இடைவெளியின் பின்னர், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 300 ரூபாவை விடவும் குறைவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மத்திய வங்கியின் தரவுகளின்படி, இறுதியாக 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி 300 ரூபாவை விட குறைவாக அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி பதிவாகியிருந்ததாகவும்,

குறித்த திகதியில் டொலரின் கொள்வனவு பெறுமதி 298.10 ரூபாவாகவும் விற்பனை பெறுமதி 308.49 ரூபாவாகவும் பதிவாகியிருந்ததாகவும் மத்திய வங்கி தரவுகள் காட்டுகின்றன. (அ)

## அடுத்த மாதம் முதல் வீட்டிலிருந்தவாறே உங்கள் கடவுச்சீட்டுக்களைப் பெறலாம்!

கொழும்பு,மே 19

எதிர்வரும் ஜீன் மாதம் முதல், பொதுமக்கள் தங்களுக்கான கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு பிரவேசிக்க வேண்டிய அவசியம் இல்லை என அதன் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தை, இணையத்தளம் ஊடாக அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு அமைவான கட்டணம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின், வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம்.

அத்துடன், பிரதேச செயலக காரியாலயங்களில், கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்ய முடியும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

இதையடுத்து, மூன்று நாட்களின் பின்னர், பதிவுத் தபால் மூலம், விண்ணப்பதாரரின் வீட்டுக்கே, கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும் என அவர் கூறினார். (அ)



## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்க்கடன் பூசை!

முல்லைத்தீவு, மே 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் ஊடாக முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக பிதிர்க்கடன் செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி அகில இலங்கை சைவத்தமிழ் மன்றத்தின் குருக்களால் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு முள்ளிவாய்க்கால், கப்பலடி கடற்கரையில் இந்த பிதிர்க்கடன் ஆத்ம சாந்தி பூசை இடம்பெற்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.